56 பக்கங்கள்

உதயன்

சுடர்: 29 கதிர்: 215 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 15, ஞாயிறு 29.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

யாழ். - 30/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

German Language Academy
ஜேர்மன், சுவிஸ் செல்பவர்களுக் கான டொச் மொழிகள் ஜேர்மனி யில் வசித்து வந்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் இலகுவாக கற்பிக்கப்படுகின்றது.
தொலைபேசியில் தொடர்புகொண்ட பின் நேரில் வரவும்
077 9709 322
German Language Academy
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

29 JUN 2014

தெளிவான வானிலை
32°C
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 31 km/h
ஈரப்பதம்: 45%
காற்றழுத்தம்: 1009 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:22
சூரியஸ்தமனம்: 18:04

# மோடியுடன் ஜூலையில் கூட்டமைப்பினர் சந்திப்பு

## திகதி இன்னும் உறுதியாகவில்லை. வடக்கு முதல்வரும் உடன் செல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அடுத்த மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன், வடக்கு மாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரனும் அங்கு செல்வார் எனக் கூறப்படுகிறது.
இந்தியாவின் புதிய பிரதமராகப் பாரதிய ஜனதாக் கட்சியின் நரேந்திர மோடி கடந்த மே மாதம் 26 ஆம் திகதி பதவியேற்றிருந்தார். இந்தியப் புதிய பிரதமரின் பதவியேற்பு நிகழ்வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சென்றிருந்தார். இதன்போது இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது.
இவ்வாறானதொரு நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனாலும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனாலும், தனித் தனியே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.


நரேந்திர மோடி


சம்பந்தன்

மோடி புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், விரைவில் அவரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும் அந்தக் கடிதங்களில் கோரப்பட்டிருந்தது. இந்தக் கடிதங்களுக்குப் புதுடில்லியிலிருந்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினூடாகப் பதில் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து நம்பகரமாக அறிய முடிந்தது.
அடுத்த மாத நடுப்பகுதியில் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்திய அரசு நேரம் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பிரதமருடனான சந்திப்பு அடுத்த மாத நடுப்பகுதியில் இடம்பெறும் என்றும், இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும் செல்லவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.
இதேவேளை, தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்திப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியிருந்தபோதும் அதற்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## மிதிவெடி அகற்றும் பணியாளர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
முகமாலைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 'ஹலோரஸ்ட்' மிதிவெடியகற்றும் நிறுவனப் பணியாளர் ஒருவர் தவறுதலான வெடி விபத்தில் இரு கைகளிலும் படுகாயங்களுக்கு உள்ளானார்.
கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளத்தைச் சேர்ந்த பாலசிங்கம் நகுலேஸ்வரன் (வயது-36) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இந்த வெடி விபத்தில் படுகாயமடைந்தார்.
இவர் முகமாலைப் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது தவறுதலாக மிதிவெடி ஒன்று வெடித்ததில் இரு கைகளிலும் படுகாயமுற்றார். அவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.
(த-14-18-78-426)

## வடக்கு மாகாணம் இன்னும் அச்சுறுத்தலான பிரதேசமே

### சொல்கிறார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம்.ஜூன் 29
வடக்கு மாகாணம் இன்னமும் அச்சுறுத்தலான பிரதேசமாகவே உள்ளதாகவும், அங்கு பாதுகாப்பை அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
"தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமைக்கும் அதன் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டமைக்கும் பழிவாங்கும் நோக்கத்திலேயே சர்வதேச அமைப்புகள் இராணுவம் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. இராணுவம் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாததன் காரணத்தினாலேயே நாட்டில் இனக்கலவரங்களைத் தூண்டுகின்றனர்.
விடுத்லைப் புலிகள் அழிக்கப்பட்டாலும் பிரபாகரனுடன் தொடர்புடைய சர்வதேச அமைப்புகள் இன்றும் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றன.


ருவான் வணிகசூரிய

❖ 20 ஆம் பக்கம் பார்க்க

## ஆணையாளர் நிர்வாகத்தின் கீழ் வருகின்றது யாழ். மாநகர சபை

### அடுத்த ஜூலையிலேயே தேர்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்.மாநகர சபையின் நீடிக்கப்பட்ட ஆட்சிக் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றபோதும், அடுத்த வருடம் ஜூலை மாதமே மாநகர சபைக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளதால் அது வரை ஆணையாளர் நிர்வாகத்தின் கீழேயே மாநாகர சபை இயங்க உள்ளது.
வடக்கிலுள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் அடுத்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. அந்த உள்ளூராட்சி மன்றங்களுடன் சேர்த்தே யாழ். மாநகர சபைக்கான தேர்தலும் நடத்தப்படும் என்று கூறப்படுகின்றது.
யாழ்.மாநகர சபைக்கான தேர்தல் கடந்த 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று ஈ.பி.டி.பி ஆட்சியமைத்தது. உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் 4 வருடங்களாகும். கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்த மாநகர சபையின் ஆட்சிக்

❖ 20 ஆம் பக்கம் பார்க்க

153 தமிழ் அகதிகளுடன் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் தத்தளிக்கும் படகு

❖ விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்


வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ஐ-7-14)

## சாட்சிகளை தடுத்தால் அரசுக்கு ஆபத்து

### *சம்பந்தன் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 29
"போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. குழு நடத்தும் விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சாட்சியங்கள் வாக்குமூலமளிப்பதை தவிர்க்கக் கூடிய வகையில் இலங்கை அரச தரப்பினர் செயற்படுவார்களாக இருந்தால் அது ஒரு பாரதூரமான செயலாகச் சர்வதேச சமூகத்தால் கருதப்படும் என்று நாம் நினைக்கின்றோம். இதனால் சர்வதேச மட்டத்தில் பெரும் பின்விளைவுகளை இலங்கை அரசு சந்திக்கவேண்டி வரும்.
- இவ்வாறு அரசை எச்சரித்

❖ 20 ஆம் பக்கம் பார்க்க

## 50 இந்திய வீடுகளில் மீள்குடியமராத மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் கட்டி முடிக்கப்பட்டவற்றில் 50 வீடுகளில் இன்னமும் மக்கள் மீளக்குடியமரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த மார்ச் மாத இறுதியில் இந்த எண்ணிக்கை 186 ஆக இருந்த நிலையில் தற்போது அது குறைவடைந்துள்ளது.
இந்திய அரசின் நிதியுதவியுடனான வீடமைப்புத் திட்டம் யாழ்.மாவட்டத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் முழு வீடுகளையும் ஒப்பந்த நிறுவனங்கள் நிர்மாணித்துக் கொடுக்கும் வகையிலேயே செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஒப்பந்த நிறுவனங்களின் முறைகேடுகள் காரணமாக, இந்திய அரசின் நிதியைப் பெற்று மக்களே வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.
இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் வரை ஆயிரத்து 896 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பத்து சத வீதமான வீடுகளில் மக்கள் குடியேறாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு 186 வீடுகளும் இனங்காணப்பட்டிருந்தன. மின்சார வசதி உள்ளிட்ட ஏனைய வசதிகள் இல்லாமை

❖ 20 ஆம் பக்கம் பார்க்க

# 153 தமிழ் அகதிகளுடன் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் தத்தளிக்கும் படகு

இந்தியாவில் இருந்து 153 இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற பாரிய படகு ஒன்று, ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அகதிகள் படகு கிறிஸ்மஸ் தீவில் இருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் அந்தரித்து நிற்கின்றது என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

படகில் இருக்கும் இரண்டு தமிழ் அகதிகள் தம்முடன் செய்மதித் தொலை பேசியின் உதவியுடன் பேசினார்கள் என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவு சட்டத்தரணியொருவர் தெரிவித்துள்ளார்.

படகில் இருந்து பேசிய சூரியா என்ற 18 வயதுடைய பெண், இந்தப் படகில், தம்முடன் 37 சிறுவர்களும், 32 பெண்களும் இரண்டு வாரங்களாக கடலில் பயணத்தை மேற்கொண்டுள்ளனர் என்று கூறியுள்ளார்.

தாம் அகதிகள் என்றும் தமக்கு உதவிகள் தேவைப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி இந்தியாவின் புதுச்சேரியில் இருந்து புறப்பட்ட தமது படகுக்கு பணம் எதையும் செலுத்தவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

படகின் இயந்திரத்தில் பழுது இல்லையென்றும், எண்ணெய் குழாயில் ஏற்பட்டுள்ள கசிவினால், படகு மெதுவாகவே பயணிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிடம் தாம் கடந்த வியாழக்கிழமை உதவி கோரிய போதும், இன்னமும் அது கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படகில் இருந்து தொலைபேசியில் தமிழில் பேசிய இன்னொரு ஆண், தம்மிடம் எதுவும் இல்லையென்றும் அதனால் தாம் கிறிஸ்மஸ் தீவுக்கு வரவேண்டியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தாம் இந்தியாவில் இருந்து பயணத்தை ஆரம்பித்தோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படகு சேதமடைந்து, அதில் நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளது என்றும், சிறுகுழந்தைகளைத் தம்மால் பாதுகாக்க முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசிய மீன்பிடிப் படகுகள் தமக்கு அரிசி, மீன் என்பவற்றைத் தந்து உதவினார் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் 19ஆம் திகதிக்குப் பின்னர், அகதிகள் படகு எதுவும் ஆஸ்திரேலியாவுக்கு வரவில்லை.

ஆறு மாதங்களுக்கு மேலாக அகதிகள் படகுகள் வருவதைத் தடுத்த ஆஸ்திரேலிய அரசுக்கு இந்தப் படகு கிறிஸ்மஸ் தீவை அடைந்துள்ளது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரேலிய அரசுக்கு இந்தப் படகு குறித்து தகவல் அளிக்கப்பட்ட போதும், அதனை மீட்பதில் மெத்தனம் காட்டுகின்றது என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதற்கிடையே, கிறிஸ்மஸ் தீவுக்கும், ஜாவாவுக்கும் இடையில் 50 பேர் பயணம் செய்த மற்றொரு அகதிகள் படகை ஆஸ்திரேலிய கடற்படை மீட்டுள்ளது என்றும் ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(சி)

## மறுக்கின்றது ஆஸி.

*தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு, கிறிஸ்மஸ் தீவுகளில் இருந்து 250 கிலோ மீற்றர் தொலைவில் நடுக்கடலில் தத்தளிக்கின்றது என்று வெளியாகியுள்ள செய்தியை ஆஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிஸன் மறுத்துள்ளார்.*

*ஆஸ்திரேலிய கடற்பரப்பில் சிக்கித் தவிப்பதாக தகவல்கள் கிடைத்தால் அதனை மீட்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)*

# அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் இதுவரை 200 ஆலோசனைகள்

### கிடைத்துள்ளன என்கிறார் கூட்டமைப்பு பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் தொடர்பில் 200 இற்கும் மேற்பட்ட ஆலோசனைகள் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் இறுதி அரசியல் தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதற்காக, தமிழ் மக்களிடமிருந்து தீர்வுத் திட்ட ஆலோசனைகள் கடந்த மாதம் கோரப்பட்டிருந்தன. புலம்பெயர் தேசங்களில் வசிப்பவர்களும் தீர்வுத் திட்டம் தொடர்பில் தமது ஆலோசனைகளை முன்வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய புலம்பெயர் நாடுகளிலிருந்து கணிசமான ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதே போன்று இலங்கையிலுள்ள தமிழ் மக்களிடமிருந்தும் ஆலோசனைகள் கிடைத்துள்ளன.

இந்த ஆலோசனைகள் பல்வேறுபட்ட கருத்துக்களுடன் காணப்படுகின்றன. சில ஆலோசனைகள் ஏனைய நாடுகளின் அரசியல் சாசனத்தை தழுவியதாக தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் இருக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலோசனைகளின் அடிப்படையில், தமிழ்மக்களின் அரசியல் தீர்வுத் திட்டம் விரைவில் தயாரிக்கப்படும். - என்றார். (ஜ-5)

# மலசலகூடம் அமைக்க 15 குடும்பங்களுக்கு நிதியுதவி

வலி.வடக்கு, ஜூன் 29

மீள் குடியேற்ற அமைச்சின் உதவித் திட்டத்தின் கீழ், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக் குடியேறிய 15 குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைப்பதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடை பெற்றன.

உடுவில் உதவி பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக பன்னிரெண்டாயிரம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு மலசல கூடத்தை அமைக்க 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பணம் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

(ஜ-86)


**Become a Network Professional**

* Hardware Engineering
* Network Administration
* Microsoft Certifications
* Cisco Certifications

25% Discount On Full Payment

CISCO CERTIFIED CCNA · CISCO CERTIFIED CCNP · Microsoft CERTIFIED Systems Engineer

WinSYS NETWORKS

Network Security Training provider in Jaffna

iCS International Academy 77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 7306000 , 071 1781771


# வடக்கு,கிழக்கில் வறுமைக்கு இராணுவத்தினரே காரணம்

### குற்றஞ்சாட்டுகிறார் வடக்கு விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம்.ஜூன்.29

இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே அதிகம். இதில் வடக்குமாகணம் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்த வறுமைக்கு காரணம் போர்சூழலாக இருந்தாலும் தொழில் வாய்ப்புக்கள் இராணுவத்துக்கு அதிகம் வழங்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம் என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி , வட்டக்கச்சி மாயவனூரில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட மாகாணங்களில் இரண்டாவது இடத்தில் கிழக்கு மாகாணமும் மூன்றாவது இடத்தில் வடக்கு மாகாணமும் உள்ளன.

தென்னிலங்கைக்கும் வடக்கு,கிழக்குக்கும் இடையே நிலவுகின்ற பொருளாதார ரீதியான இந்த ஏற்றத்தாழ்வுக்கு இராணுவப் பொருளாதாரமே காரணம்.

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் சனத்தொகையில் 26.3 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்துள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை இப்போது 8.9 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. இதற்கு, தென்னிலங்கையில் வேலைவாய்ப்பில்லாமல் இருந்த கிராமப்புற ஏழைச் சிங்கள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இராணுவத்தில் வேலை வழங்கப்பட்டதும் ஒரு காரணம் என்று பொருளியல் அறிஞர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள்.

அரசு போருக்குப் பின்னர். வடக்கிலும் கிழக்கிலும் எவ்வளவோ அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதாகக் கூறிவருகிறது. ஆனால், இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களில் வடக்குக் கிழக்கிலேயே அதிகமானோர் இருக்கிறார்கள்.

தென்னிலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பது மனித நேயத்துடன் வரவேற்கக் கூடிய ஒன்றே. ஆனால், இந்த இராணுவப் பொருளாதாரம் தான் செல்வச் செழிப்போடு வாழ்ந்த எமது மக்களின் இன்றைய இழிநிலைக்கும்; வறுமைக்கும் காரணமாக அமைந்திருக்கிறது - என்றார். (ஜ-14)


**Study Medicine**

**MBBS/MD**



Approved by Sri Lankan Medical Council UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO

* UNIVERSITY OF LATVIA - LATVIA
* RIGA STRADINS UNIVERSITY - LATVIA
* VILNIUS MEDICAL UNIVERSITY - LITHUANIA
* ODESSA STATE UNIVERSITY - UKRAINE.
* TBILISI STATE MEDICAL UNIVERSITY - GEORGIA
* UNIVERSITY OF SCIENCE AND TECHNOLOGY - BANGALADESH
* INTERNATIONAL MEDICAL UNIVERSITY (IMU) - MALAYSIA
* SICHUAN UNIVERSITY- CHINA

# Scholarships Available
# Very Low Course Fee
# IELTS Not Compulsory

iCS Study Overseas 77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 4926222 , 077 3013060 107-B 1/1,Galle Road, Colombo - 06



கனடா படிக்க - 8 இலட்சம் உழைக்க 3 வருட விசா - 30 நாள்களில் பறக்கலாம்

செங்கன் விசா இத்தாலி, சுவிஸ், பிரான்ஸ், நோர்வே 2 வருட விசா - 3 வருட விசா வெறும் 15 இலட்சங்கள்

நேர்முகத் தேர்வு 02.07.2014 யாழ். அலுவலகத்தில்

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க கைநிறைய உழைக்க 2 வருட விசா

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


021 221 9016, 021 568 9090



(49433)(10.6.3)

# டெங்கு நோய்த் தாக்கம் வடமராட்சியில் அதிகரிப்பு

## மக்களை விழிப்பாக இருக்குமாறு கோரிக்கை



டெங்கு விழிப்புணர்வுப் பரப்புரையில் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து ஈடுபடுகின்றனர்.

கரணவாய், ஜூன் 29
டெங்கு நோய்த் தாக்கம் பரவும் சூழல் அதிகமாக இருப்பதால் மக்களை விழிப்பாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
வடமராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வருகின்றது. குறிப்பாகக் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அல்வாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மாயக்கை, பட்டோடை, மடத்தடி போன்ற கிராமங்களில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான பலர் இனங்காணப்பட்டுள்ளனர்.
வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்குரிய காரணிகள் குறைவாகக் காணப்படுகின்ற இடங்களில் மக்கள் வீடுகளில் குளிப்பதற்குப் பயன்படுத்தும் நீர்த் தாங்கிகளிலே இத்தகைய நுளம்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
எனவே மக்கள் தாம் பயன்படுத்தும் குளியல் அறைத் தொட்டிகளை தினமும் சுத்தம் செய்து பயன்படுத்துவதுடன், வளர்ப்புப் பிராணிகளுக்கு தண்ணீர் வைக்கும் பாத்திரங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இவ்வாறு டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான இடங்களை உடையவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை வடமராட்சி அல்வாய் கிழக்குப் பகுதியிலுள்ள மாயக்கை, பட்டோடை, மடத்தடி ஆகிய பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.
கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுகாதாரப் பணிமனைகளின் மருத்துவர்களின் ஒன்றிணைவுடன் யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் இருந்து 18 புகையூட்டும் இயந்திரங்கள் பெறப்பட்டு அங்கு புகை யூட்டும் நடவடிக்கைகள் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்டன. (த-108)

## இந்த மாதத்தில் மட்டும் 40 டெங்கு நோயாளர்

கரணவாய், ஜூன் 29
வடமராட்சிப் பகுதியில் இம்மாதம் மட்டும் 40 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். வடமராட்சிப் பகுதியில் தற்போது டெங்கு நோய் பரவும் சூழல் அதிகரித்துள்ளது.
கடந்த மாதம் 8 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர்.
இம்மாதம் இதுவரை 40 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 30 டெங்கு நோயாளர்கள் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணி மனைக்கு உட்பட்ட பகுதிகளிலும் மிகுதி நோயாளர்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளிலும் இனங்காணப்பட்டுள்ளனர்.
இனங்காணப்பட்ட நோயாளர்களில் பெரும்பாலானோர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதுடன் நோய்த்தாக்கம் அதிகமாக உள்ளவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை அல்வாய் மாயக்கைப் பகுதியில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகிய 21 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-108)

## வடமராட்சியில் குழு மோதல்களால் மக்களுக்குப் பெரும் இடையூறு

பருத்தித்துறை, ஜூன் 29
வடமராட்சியில் இளைஞர்களிடையே ஏற்படும் குழு மோதல்களினால் பெரும் இடையூறுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்துமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் நெல்லியடி முடக்காட்டுப் பகுதியில் இரு இளைஞர் குழுவினருக்கிடையே மோதல் ஏற்பட்டது. முடக்காட்டுச் சந்தியின் பிரதான வீதியில் கற்களினால் எறிந்து இரு குழுவினரும் சண்டையிட்டனர்.
தமது எதிரிகள் வருவதாக நினைத்து சில இளைஞர்கள் வீதியில் சென்ற மக்களைப் பொல்லு, கூரிய ஆயுதங்கள் என்பவற்றைக் காட்டி அச்சுறுத்தியுள்ளனர். இதனால் அந்தப் பகுதி ஊடாகச் சிறிது நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.
அதன் பின்னர் வீதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது கலவரத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.
'மின்னல்' என்ற பெயருடன் இளைஞர்குழுவொன்றுநடமாடுவதாகவும், இவர்களே இவ்வாறு மோதல்களில் ஈடுபடுவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (த-422)

# நவக்கிரியிலும் நேற்று கடாக்கள் வெட்டிச் சரிப்பு



வலி.வடக்கு, ஜூன் 29
புத்தூர் நவக்கிரிச் சந்தியில் அமைந்துள்ள அண்ணமார் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை 25 க்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டதுடன், 50 க்கும் மேற்பட்ட சேவல்களும் வெட்டப்பட்டன.
நேற்று முன்தினம் மாலை முதல் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நள்ளிரவு 10 க்கும் மேற்பட்ட காவடிகள் ஆலயத்தைச் சென்றடைந்தன. அதனைத் தொடர்ந்து காலை முதல் குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயம், வைரவர் ஆலயம் மற்றும் அண்ணமார் ஆலயம் என்பவற்றில் பொங்கிப் படைத்துப் பூசை வழிபாடுகள் கிராமிய மரபுக்கு அமைவாக இடம்பெற்றன.
இதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் கடாக்கள், சேவல்களை வெட்டிச் சரிக்கும் நிகழ்வு இடம்பெற்றன. இந்த நிகழ்வில் ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (த-86)

## முதியோருக்கு உலர் உணவு

கிளிநொச்சி, ஜூன் 29
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சாந்தபுரம் பகுதியில் வாழும் 90 முதியோர்களுக்கு நாளை திங்கட்கிழமை உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.
சாந்தபுரம் முதியோர் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட 90 முதியோர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.
சாந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் க.இராசேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொள்வார். (த-9)

## மகா கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை அருள்மிகு செந்தில் முருகையா திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9ஆம்திகதி புதன் கிழமை காலை 8.38 தொடக்கம் 10.38 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.
8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும்.

## காலாவதியான பொருள்கள் விற்றவர்களுக்கு அபராதம்

வலி.வடக்கு, ஜூன் 29
பாவனைத் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரண்டு வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் சங்கத்தானை, மீசாலை கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது பாவனைத் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமைக் கண்டுபிடித்து இவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
நேற்று முன்தினம் இந்த வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
வழக்கை விசாரித்த நீதிவான் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (த-9)

## திணைக்களங்களின் போர் வீரர் தின கொடி விற்பனை

யாழ்ப்பாணம், ஜூன் 29
தேசிய போர் வீரர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் கொடிகள் விற்பனை செய்யப்படுகின்றன.
வடக்கில் உள்ள சகல அரச திணைக்கள அலுவலர்களும் இதற்குத் தங்களாலான நிதி உதவியை வழங்கி தேசிய போர் வீரர் தினத்துக்கு பங்களிப்பைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சிச் சபைகள் ஏனைய திணைக்களங்கள் என வடக்கில் உள்ள சகல திணைக்களங்களிலும் இந்தக் கொடி விற்பனை செய்யப்பட்டது. (த-50)






யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் 74ஆவது தலைவர் பதவியேற்பு விழா கடந்த புதன்கிழமை நீராவியடியில் உள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. 74 ஆவது தலைவராக சிவராசா அனுராஜ் பதவியேற்றார். இதன்போது முன்னாள் தலைவர் சங்கர் உரிய முறைப்படி புதிய தலைவரிடம் பொறுப்புக்களைக் கையளித்தார். இந்த நிகழ்வில் றோட்டறிக் கழகத்தின் உயர் விருதான பி.எச்.எவ்.விருதும் வழங்கப்பட்டது. தகைமைசார் கல்வியியலாளர் விருது பேராசிரியர் ம.நடராஜசுந்தரத்துக்கும், உழைப்பால் உயர்ந்த சமூக சேவையாளர் விருது தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன. அத்துடன் றோட்டறிக் கழகத்தின் நிதியத்துக்கு 5000 அமெரிக்க டொலர்களை யாழ். றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் வழங்கினார். (த)

# அரசு தரும் என்று எதிர்பாராமல் எம் மக்களுக்கு உதவுகின்றோம்

## வடக்கு முதலமைச்சர் கருத்து


யாழ்ப்பாணம், ஜூன் 29

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்களுக்கும் இந்த அரசு உதவும் அல்லது அதற்குரிய அதிகாரங்களை எமக்கு வழங்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. எமது மக்களுக்கு உதவ யார் முன்வருகிறார்களோ அவர்களின் உதவிகளைப் பெற்று மக்களுக்கு உதவி வருகின்றோம் என வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா நேற்று சனிக்கிழமை கல்லூரி அதிபர் தேவராணி நவரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்னர் தமிழர்கள் இலங்கையின் தெற்கில் இருந்து விரட்டப்பட்டார்கள். இன்று முஸ்லிம்கள் விரட்டப்படுகிறார்கள். சிறுபான்மையினரால் தமக்கு அச்சுறுத்தல்கள், போட்டிகள் உருவாகும் அல்லது உருவாகக் கூடும் என்று பெரும்பான்மையினர் நினைத்த உடனேயே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர். முன்னர் தமிழர்கள் கல்வியில் சிறந்து அரச உத்தியோகங்களில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி இருந்தார்கள். இதனால்தான் தமிழர்களை விரட்ட 1958 ஆம் ஆண்டு தொடக்கம் தெற்கில் கலவரங்கள் வெடித்தன. இன்று முஸ்லிம்கள் பொருளாதார ரீதியில் முன்னேறி வருவதைக் கண்டதும் அதைப் பொறுக்க முடியாமல் பெரும்பான்மையினர் அவர்கள் மீது கை வைக்கின்றனர். இதனால்தான் அவர்கள் அடித்துத் துரத்துகிறார்கள். தொழிலிடங்களை தீக்கு இரையாக்குகின்றனர். இதை ஒரு மோசமான செயலாகவே பார்க்க வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டு பல வித வடுக்களையும் வருத்தங்களையும் சுமக்கும் எமது சமுதாயம் சீரிய நிலையை அடைய வேண்டும் என்பதில் கரிசனை காட்ட மாணவர்களாகிய நீங்கள் முன்வரவேண்டும். உங்கள் சுற்றாடலை நீங்களே ஒன்று சேர்ந்து அபிவிருத்தி செய்ய வேண்டும். உங்கள் கிராமங்களைச் சுத்தமாக வைத்திருக்கவும் கலாசாரத்தைப் பேணவும் மாணவச் செல்வங்களாகிய நீங்கள் முன்வர வேண்டும். வசதியில் லாதவர்களுக்கு உதவமுன்வர வேண்டும் - என்றார். (ஐ-109-173)



நிகழ்வை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார் முதலமைச்சர்.

## இணுவில் கந்தனின் இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 29

இணுவில் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தைச் சிறப்பிக்கும் வகையில் உள்ளூர் கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட 'இணுவைக் கந்தா போற்றி' இசை இறுவட்டு நாளை திங்கட்கிழமை மதியம் ஒரு மணிக்கு ஆலய முன்றலில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

சி.கௌரீஷன் தயாரிப்பில் உருவான இந்த இறுவட்டுக்குரிய பாடல்களை தினேஸ் ஏகாம்பரம், றஜித், அழகேசன், பவானந்தமூர்த்தி, சி.கௌரீஷன், சண்முகப்பிரியன் ஆகியோர் எழுதியுள்ளனர்.

அமிர்தலோயனன், அமிர்தசிந்துயன், பாலராயன், மதுசிகன், கிசாந், மதுசா ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். இறுவட்டுக்கான இசையினை சுதர்சன் வழங்கி உள்ளார். (த-5)



## 3 ஹன்ரர் வாகனங்கள் நேற்று மணலுடன் சிக்கின

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றிய மூன்று ஹன்ரர் வாகனங்களை மணலுடன் நேற்றுப் பிற்பகல் கைப்பற்றி இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் ஹன்ரர்கள் குடத்தனைப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிக் கொண்டு வந்துகொண்டிருந்த போது வெற்றிலைக்கேணி - வல்லிபுரக்கோயில் பிரதான வீதியில் சோதனை ஒன்றின் போது தம்மிடம் சிக்கியதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அண்மைக் காலமாகச் சட்ட விரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் அதிகரித்திருந்தன. இது தொடர்பில் பொலிஸாரும் தீவிர தேடுதல்களை மேற்கொண்டு இருந்தனர். இந்த நிலையில் இந்தத் தேடுதலுக்காக நேற்றைய தினம் யாழ். மாவட்டக் குற்றப்புலனாய்வு அதிகாரி ரம்கில் தலைமையில் விசேட பொலிஸ் குழு ஒன்றும் களமிறக்கப்பட்டிருந்தது. இக்குழு நேற்றுப் பிற்பகல் வடமராட்சி கிழக்கின் வீதிகளில் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. இந்நிலையில் குடத்தனையில் இருந்து வல்லிபுரக் கோயில் வீதியும் வெற்றிலைக் கேணி வீதியும் சந்திக்கும் பிரதான வீதியில் நேற்றுச் சந்தேகத்துக்கிடமான மூன்று ஹன்ரர் வாகனங்களைச் சோதனையிட முயன்றபோது அதில் இருந்தவர்கள் தமது வானகங்களை நிறுத்தி விட்டுத் தப்பியோடியுள்ளனர். மணல் ஏற்றியபடி இருந்த அந்த ஹன்ரர்களைத் தாங்கள் கைப்பற்றியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த வாகனங்கள் பொதுமக்களின் உதவியுடன் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டன. (த-109)

# காணி அபகரிப்புக்கு எதிரான முறைப்பாடுகள் கொழும்புக்கு

## மனித உரிமை ஆணைக்குழு அனுப்பி வைப்பு

> ❝ நில அளவை செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் கடந்த ஜூன் 2 ஆம் திகதி குறித்த பகுதிக்கு வந்தபோது, நாம் எதிர்ப்பு வெளியிட்டோம். இதனையடுத்து காணி அளவீட்டு நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், ஜூன் 29

அச்சுவேலியில், இராணுவத்தினரின் காணி அபகரிப்புக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் கொழும்பிலுள்ள ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

தமது ஆட்சேபனைகளையும் மீறி இராணுவத்தினர் காணிகள் சுவீகரிப்பதற்கு எதிராக அச்சுவேலியைச் சேர்ந்த 9 பேர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் கடந்த ஜூன் 3 ஆம் திகதி முறைப்பாடு செய்தனர்.

அந்த முறைப்பாட்டில், அச்சுவேலி நகரப் பகுதியில் எமக்குச் சொந்தமான காணி மற்றும் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவற்றை இராணுவத்தினர் நீண்ட காலமாக ஆக்கிரமித்து வைத்துள்ளனர். குறித்த காணிகளை நிரந்தரமாகக் கையகப்படுத்தும் நோக்குடன் சுவீகரிப்பு அறிவித்தல்களும் இராணுவத்தினரால் மே மாதம் 22 ஆம் திகதி ஒட்டப்பட்டுள்ளன.


இதனையடுத்து எமது காணிகளைச் சுவீகரிப்பதற்கான ஆட்சேபனைகளைப் பிரதேச செயலருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்தோம். எமது ஆட்சேபனைகளைப் புறந்தள்ளி, காணி சுவீகரிப்பதற்குரிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

காணிகளை அடையாளப்படுத்தி நில அளவை செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் கடந்த ஜூன் 2 ஆம் திகதி குறித்த பகுதிக்கு வந்தபோது, நாம் எதிர்ப்பு வெளியிட்டோம். இதனையடுத்துக் காணி அளவீட்டு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும், எமது ஆட்சேபனைகளையும் மீறிக் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிராக குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்வதாகத் தெரிவித்தே அவர்கள், ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொண்டனர்.

இந்த முறைப்பாடு கொழும்பிலுள்ள ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்களால் இது தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார். (த-5)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
29 ★ 07 ★ 1951

மறைவு
13 ★ 06 ★ 2013

அமரர்

## சரவணமுத்து பரம்சோதி

(இடைப்பிட்டி- காரைநகர்)

அன்பின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே!
ஆசையோடு இன்சொல்பேசும் ஈகையின் தலைவரே!
உங்கள் மறைவு எங்களால் தாங்க முடியவில்லையே!
எங்களை வளர்த்து ஆளாக்கிய அன்புத்தெய்வமே!
ஏன் எம்மை விட்டுப் பிரிந்தீர்?
உங்கள் சிரித்த முகம் எங்கள் நெஞ்சில் உறைந்துள்ளது!
வாழ்வில் எமை உயர்த்திய தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(சீ/14828)(4.3.6)

[வெங்கடேஸ்வரா]

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஆனி-16 திங்கட்கிழமை 30.06.2014
திதி: திருதியை மா.07.02 வரை
நட்சத்திரம்: பூசம் மு.ப.11.34 வரை
சுபநேரம்: 11.56 - 01.26 வரை
இராகுகாலம்: 07.26-08.56 வரை

**மேடம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள்.

**கடகம்:** எடுத்த வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பழைய பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாள்களிடம் பணிவாகப் பேசி வேலை வாங்குங்கள்.

**சிங்கம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. தாயின் உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. சகோதர வகையில் நன்மை கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும்.

**துலாம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** எதையும் திட்டமிட்டுச் செய்யப் பாருங்கள். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துப்போட்டுப் பார்க்க வேண்டியிருக்கும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.

**தனுசு:** குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிராத்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**மகரம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உண்டு. பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 8 | 4 | 2 | | 3 |
| | 5 | | 1 | | | | | 7 |
| 3 | 4 | | | | | | 5 | |
| | 3 | | | | 2 | | | 5 |
| 9 | | 1 | 8 | | 5 | 7 | | 4 |
| 7 | | | 3 | | | | 2 | |
| | 7 | | | | | | 4 | 9 |
| 1 | | | | | 3 | | 7 | |
| 8 | | 4 | 6 | 5 | | | 1 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 8 | 3 | 1 | 6 | 7 | 2 | 9 |
| 1 | 7 | 6 | 5 | 2 | 9 | 3 | 4 | 8 |
| 3 | 9 | 2 | 7 | 8 | 4 | 6 | 1 | 5 |
| 6 | 1 | 4 | 2 | 9 | 3 | 8 | 5 | 7 |
| 5 | 2 | 3 | 4 | 7 | 8 | 9 | 6 | 1 |
| 7 | 8 | 9 | 6 | 5 | 1 | 4 | 3 | 2 |
| 2 | 6 | 5 | 8 | 3 | 7 | 1 | 9 | 4 |
| 8 | 4 | 1 | 9 | 6 | 2 | 5 | 7 | 3 |
| 9 | 3 | 7 | 1 | 4 | 5 | 2 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




உ

# இணுவில் கந்தசுவாமி கோயில்

## புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோ உத்தம (33 குண்டம்) மகா கும்பாபிஷேகப் பெருவிழா

## 04.07.2014 வெள்ளிக்கிழமை

இன்று 29.06.2014 காலை 9.00 மணிக்கு புதிதாக உருவாக்கப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவச்சிலைகள் இணுவில் காரைக்கால் சிவன் கோயிலிலிருந்து மேளதாளம் சகிதம் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டு முற்பகல் 11.00 மணிக்கு பிரதிஷ்டை செய்யப்படும்.

**எண்ணெய்க்காப்பு: 01.07.2014 செவ்வாய் காலை 8.30 தொடக்கம் 02.07.2014 புதன் மாலை 4.00 மணிவரை.**

இன்று மாலை 3.00 மணிக்கு மகாயாகம் ஆரம்பம்

இப்பெருவிழாவில் தினமும் மகாயாகமும் மாகேஸ்வர பூசையும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் இப்பெருவிழாவில் பங்குகொண்டு எம்பெருமானுடைய இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:

**KANNAN**
Free From Sand and Stones
(கல் மண் நீக்கப்பட்டது)
Quality Rice No: 1
NADU
[சி/13849][4.6.3]
Station Rd. Chunnakam. 077 711 0265

**ஆனந்தா** கட்டடப் பல்பொருள் நிலையம்
No.1 பெப்சி ஓடுகள், செங்கற்கள், மண்வெட்டி அனைத்து வகையான கட்டடப் பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம்.
537, கே.கே.எஸ். வீதி, இணுவில்.
021 224 1482, 077 114 2211

# ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைக்காவிடின் பெரும் பின்விளைவுகளைச் சந்திக்கும் அரசு

## எச்சரிக்கின்றார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



சம்பந்தன்

நேர்காணல் - அ.யசீகரன்

"இலங்கை அரசு பிடிவாதமாக இருக்காமல் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்பில் ஐ.நா. குழு நடத்தும் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அரசு என்னவிதமாக இந்தக் கருமத்தில் செயற்படப் போகின்றது என்பதனை நாங்கள் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். சாட்சிகள் வாக்குமூலமளிப்பதைத் தவிர்க்கக்கூடிய வகையில் இலங்கை அரச தரப்பினர் செயற்படுவார்களாக இருந்தால் அது ஒரு பாரதூரமான செயலாக சர்வதேச சமூகத்தால் கருதப்படும் என்று நாம் நினைக்கின்றோம். சர்வதேச மட்டத்தில் பெரும் பின்விளைவுளை இலங்கை அரசு சந்திக்க வேண்டி வரும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அரசை எச்சரித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் 'சுடர் ஒளி'க்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவரின் செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

**கேள்வி:** இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே தீர்வு காணப்படும் என்று வலியுறுத்தி வரும் அரசு, அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பங்கேற்குமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றது. ஆனால் அரசின் தெரிவுக்குழுவில் பங்கேற்று ஏமாறத் தயாரில்லை என்று கூட்டமைப்பினராகிய நீங்கள் கூறி வருகின்றீர்கள். இந்த நிலையில், இந்தத் தெரிவுக்குழுவில் ஒருமுறை பங்கேற்று அரசின் ஏமாற்று வித்தையை சர்வ தேசத்துக்கு நிரூபித்துக் காட்டியிருக்கலாம் தானே?

**பதில்:** தெரிவுக்குழு சம்பந்தமாக பேசுகின்றபோது எந்தப் பின்னணியில் இதன் விவகாரம் உருவானது என்பதனை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் 2011ஆம் வருடஜனவரி மாதம் இரு தரப்பு பேச்சு நடைபெற்றது. பேச்சின் போது அரசியல் தீர்வு சம்பந்தமான எமது நிலைப்பாட்டை எழுத்தில் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அந்த நிலைப்பாட்டுக்கு எழுத்தில் தமது பதிலைத் தருவோம் என்று அரச தரப்பினர் எம்மிடம் கூறியிருந்தார்கள். ஆனால் 5 மாதங்களாக அவர்களின் பதில் வரவில்லை. அந்த 5 மாதங்களில் 7 கூட்டங்கள் நடைபெற்றன. எனினும், அவர்களுடைய பதில் வரவில்லை: அந்தச் சூழ்நிலையில் பேச்சுக்கான அடுத்த திகதியை நிர்ணயிப்பதற்கு நாம் மறுத்தோம்.

இந்த மறுப்பின் காரணமாக ஜனாதிபதி என்னை அழைத்தார். அவருக்கும் எனக்கும் இடையில் சில பேச்சுகள் நடைபெற்றன. இதன்போது இரு தரப்பு பேச்சு என்ன மாதிரி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது பற்றி அவருக்கும் எனக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தினுடைய விவரங்கள் இரு தரப்பு பேச்சு மீண்டும் ஆரம்பமானபோது கூட்டப் பதிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்குப் பின்னர்தான் தெரிவுக்குழு சம்பந்தமாக அரசு பேச ஆரம்பித்தது. இந்தத் தெரிவுக்குழுவுக்கு அரசால் நியமிக்கப்பட்ட முக்கிய பிரதிநிதிகளான ஆளும்தரப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களும், அமைச்சர்களும் பல விடயங்கள் சம்பந்தமாக தமது கருத்துக்களை கூறியிருக்கின்றார்கள். உதாரணமாக 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் உள்ள அதிகாரங்களில் பலவற்றைக்கூட நீக்க வேண்டும் என்றும், அதுவே தெரிவுக்குழுவின் நோக்கம் என்றும் அவர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

தெரிவுக்குழுவில் அரச தரப்புக்குள் பெரும்பான்மை இருக்கின்றது. 31 பேரில் 19 பேர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். தெரிவுக்குழுவில் எமக்கு 3 அல்லது 4 இடங்கள்தான் கிடைத்தன. இந்தச் சூழ்நிலையில் எமது இரு தரப்புப் பேச்சின் மூலமாக அரசியல் தீர்வு குறித்து அரசுக்கும் எமக்கும் இடையில் ஒரு தெளிவான நிலைப்பாடு உருவாகாமல் தெரிவுக்குழு மூலமாக நாம் எதனையும் அடையும் நிலைமை ஏற்படாது. இதனை நாம் இலங்கை அரசுக்கும் இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திற்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இரு தரப்பு பேச்சின்போது காணப்பட முடியாத இணக்கத்தை அரச தரப்பில் உள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கடினமான கருத்துக்களை கூறுகின்ற ஒரு சூழலில் - உண்மையான அதிகாரப் பகிர்வுக்கு மாறாக அந்தத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவது மூலமாக நாம் எதனையும் அடையலாம் என்று நினைக்கவும் இல்லை; அங்கு சென்று ஏமாற்றப்படுவதற்கும் நாம் தயாராக இருக்கவும் இல்லை. சர்வதேச சமூகத்திற்கு நாம் இதனைத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். தேவையேற்படின் இன்னும் கூடுதலாக நாம் விளக்கிக்கூறுவோம்.

அரசின் நிலைப்பாட்டில் ஜனாதிபதிக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் சம்பந்தமாக அவர்கள் திருப்திகரமாக நடக்கும் வரையில் நாம் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது முடிந்த விடயம் அல்ல.

**கேள்வி :** தமிழர் பிரச்சினைக்குச் சர்வதேச மத்தியஸ்தத்துடன் தீர்வு காணத்தான் நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா?

**பதில்:** அது என்ன விதமாக அமையும் என்று இப்போதைக்கு சொல்ல முடியாது. சர்வதேசத்தினுடைய பங்களிப்பு என்றைக்கும் இருக்கத்தான் செய்கின்றது. 1983ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவினுடைய பங்களிப்பு தொடர்ந்து இருந்திருக்கின்றது. சில காலங்களில் அது கொஞ்சம் மௌனமாக இருந்திருக்கலாம்.

அண்மையில் இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி சத்தியப் பிரமாணம் செய்து அடுத்த நாள் அவருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற முதல் பேச்சில் தமிழர்களுடைய பிரச்சினை சம்பந்தமாகப் பேசப்பட்டிருக்கின்றது. எனவே, ஒரு வழியில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு விரைவில் ஏதோஒரு கதவு திறக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதனை அடைவதற்கு நாம் முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:** சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கிணங்க தென்னாபிரிக்க அரசு, இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்துள்ளது. இலங்கை அரச தரப்பையும், கூட்டமைப்பினராகிய தங்களையும் நேரில் அழைத்து அந்நாட்டு அரசு பேச்சு நடத்தியுள்ளது. அத்துடன் இந்த நல்லிணக்க முயற்சிக்கு தமது நாட்டின் சார்பில் சிறப்புத் தூதுவர் ஒருவரையும் தென்னாபிரிக்க ஜனாதிபதி நியமித்துள்ளார். ஆனால், தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சிகளை இலங்கை அரச தரப்பைச் சார்ந்தவர்கள் விமர்சிக்க ஆரம்பித்துள்ளார்கள். எனவே, தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தம் தொடருமா?

**பதில்:** எந்த அடிப்படையில் தென்னாபிரிக்காவின் பங்களிப்பு இடம்பெறவேண்டும் என்பது பற்றி நாம் அந்நாட்டு ஜனாதிபதி ஜேக்கப் ஸுமாவுக்கும், அவரால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தூதுவர் சிறில் ரமபோஷவுக்கும், தென்னாபிரிக்க அரசைச் சார்ந்த முக்கியஸ்தர்களுக்கும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கியஸ்தர்களுக்கும் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். நாங்கள் தென்னா பிரிக்காவுக்கு இருதடவைகள் சென்று வந்திருக்கின்றோம். இதன்போது பலரைச் சந்தித்திருக்கின்றோம்.

தென்னாபிரிக்காவின் பங்களிப்பு சம்பந்தமாக நாங்கள் இந்தியாவுடனும் பேசியிருக்கின்றோம். ஏனைய உலக நாடுகளுடனும் நாங்கள் பேசியிருக்கின்றோம்.

விசுவாசமாக இரு பகுதியினரும் தென்னாபிரிக்காவின் முயற்சிக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்குபவர்களாக இருந்தால் அது வெற்றியளிக்கும் என நாம் நம்புகின்றோம்.

நாம் அறிந்த வரையில் தென்னாபிரிக்காவின் முயற்சி இதுவரையில் கைவிடப்பட்டதாக அறியவில்லை.

அந்த முயற்சி சம்பந்தமாக ஒரு தெளிவு எதிர்வரும் வாரங்களில் வெளிப்படும் என்று நான் நினைக்கின்றேன்.

**கேள்வி: இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி அரசின் மீது இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பில் நம்பிக்கை வைத்துள்ளீர்களா?**

**பதில்:** பிரதமர் மோடியை நாம் இன்னும் நேரில் சந்தித்துப் பேசவில்லை. ஆனால், தற்போதைய வெளிவிவகார அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் உட்பட பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களுடன் பேசியிருக்கின்றோம்.

இலங்கைத் தமிழரின் பிரச்சினை நியாயமான வழியில் தீர்க்கப்படவேண்டும் என்பதே இந்தியாவின் கோரிக்கை. அதனைக் குறிப்பிட்ட அடிப்படையில் சொல்வதாக இருந்தால் தங்களுடைய மாநிலங்களில் வெவ்வேறு இனங்களைச் சார்ந்த வெவ்வேறு மொழிகளைச் சார்ந்த மக்களுக்கு எவ்விதமான அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த அடிப்படையிலாவது இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்பது இந்தியாவினுடைய நிலைப்பாடு.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது. அதுதான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் சாராம்சமாகும்.

மோடி தலைமையிலான அரசின் கொள்கையும் அதே கொள்கையாகத்தான் இருக்கும் என்பதில் எமக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஆனால், இந்த அரசின் அணுகுமுறைகளில் சில மாற்றங்கள் இருக்கலாம்.

காங்கிரஸ் ஆட்சியின்போது பிரதமராக இருந்த மன்மோகன் சிங் மிகவும் மெதுவானவர். அவருடைய அணுகுமுறைக்கும் தற்போதைய மோடி தலைமையிலான அரசின் அணுகுமுறைக்கும் இடையில் சில மாற்றங்கள் இருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமுண்டு.

**கேள்வி:** வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருந்தாலும் அதன் நிர்வாக நடவடிக்கைகள் மத்திய அரசால் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகின்றன. 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. எனவே, வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி அதனை அமோக வெற்றியடைய வைத்த தமிழ் மக்களுக்கு கட்சியின் தலைவர் என்ற ரீதியில் என்ன கூற விரும்புகிறீங்கள்?

**பதில்:** தமிழர் பிரச்சினை ஓர் ஆழமான பிரச்சினை. நாங்கள் ஒரு தனித்துவமான மக்கள். எங்களுக்கு தனித்துவமான பாரம்பரியம் உண்டு. எங்களுக்கு ஒரு தனி மொழி உண்டு. நாங்கள் வேறு மதங்களைப் பின்பற்றுகின்றோம். எமது கலாசாரம் வேறுபட்டது. எமது அபிலாஷைகள் வேறு. இந்த உண்மைகளை ஏற்றுக்கொள்ள அரச தரப்பினருக்கு கஷ்டமாக இருக்கின்றது. இதுதான் எமது பிரச்சினைக்கு மூல காரணம்.

13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வாகக் கணிக்கவில்லை. அதில் பல திருத்தங்கள் - முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும். அதேசமயத்தில் அதைக் கூட நிறைவேற்றுவதற்கு அரசு பின் வாங்கு கின்றது. இவ்விதமாகச் செயற்படும் அரச தரப்பினர், கிழக்கு மாகாணத்தில் செய்ததைப் போன்று வடக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்தை மாற்றியமைத்து எங்களுக்குரிய மொழி ரீதியான- கலாசார ரீதியான- அடையாளங்களை இல்லாமல் செய்து அந்தப் பிரதேசங்களுக்கு வேறொரு தோற்றத்தைக் கொடுப்பதற்கு பல கோணங்களில் பல துறைகளில் சில முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதுதான் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலாக இருப்பதாக இருந்தால் எமது வடக்கு மாகாண ஆட்சிக்கு அவர்கள் உதவுவார்கள் என்று நாங்கள் நம்புவதற்கு இடமில்லை.

இருந்தபோதிலும்கூட வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் எமக்கு மிகச் சிறந்த வெற்றியைத் தந்துள்ளார்கள்.

இந்தக் கருமங்களைக் கையாள்வதற்கு எங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் ஓரளவுக்காவது தொடர்பு இருக்கவேண்டும் என்ற காரணத்தின் நிமித்தம் எமது மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருமத்தைப் பொறுத்த வரையில் அரசுடன் ஒத்துழைத்து நாங்கள் செயற்படத் தயாராக இருக்கின்றோம் என்பதனை நாம் வெளிக்கொணர்ந்தோம். அவற்றை அரசு புரிந்து கொள்ளவில்லை. இதன் பெறுமதியை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

அரசியல் ரீதியாக மாற்றங்கள் ஏற்படும்போது இவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்படவேண்டிய கட்டாய நிலை ஏற்படும்.

**கேள்வி: இன்று முஸ்லிம்களைக் குறிவைத்தும்** தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் அளுத்கமவில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை மூன்றே நாள்களில் ஐ.நா. சபைக்கு சென்றுள்ளது. ஆனால், தமிழர் பிரச்சினை ஐ.நா. சபைக்கு செல்ல சுமார் 30 வருடங்களுக்கு மேல் எடுத்தன. இந்நிலையில், முஸ்லிம்களுடைய பிரச்சினை இன்று சர்வதேசத்தில் ஒலிக்க முக்கிய காரணம் என்ன? முஸ்லிம் சகோதரர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

**பதில்:** முஸ்லிம்கள் மீதான வன்முறை சர்வதேச சமூகத்தினுடைய கவனத்தை மூன்று நாள்களில் ஈர்த்திருந்தது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் தமிழர்கள்தான்.

நாங்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையில் அவர்களுடைய எதிர்காலம் நிச்சயமாக தங்கி நிற்கின்றது.

நாங்கள் ஒருமித்து ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் கிழக்கு மாகாணத்தின் அதிகாரங்களை நாம் கைப்பற்றி இருக்கலாம். எங்களை மீறி கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தை வேறு எவரும் கைப்பற்ற முடியாது.

தற்போது முஸ்லிம்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுக்கொண்டு வருகின்ற நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை தொடரவேண்டும் .

**கேள்வி:** இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. குழு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ள நிலையில் அந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என்று இலங்கை அரசு கடந்த மார்ச் மாதத்திலிருந்து கூறி வருகின்றது. அதே வேளை, ஐ.நா. விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கக்கூடாது என்று நாடாளுமன்றத்தில் அரசு தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றி உள்ளதுடன் இந்த விசாரணைக்குழு முன்னிலையில் இலங்கை அரசுக்கு எதிராக சாட்சியமளிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் தங்கள் கருத்து என்ன?

**பதில்:** ஐ.நா. விசாரணைக்குழு முன்னிலையில் இலங்கை அரசுக்கு எதிராக சாட்சியமளிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை அமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார். அவர் ஊடகங்களைப் பொறுத்தவரை பிரதானமான அமைச்சர். ஆனால், அது எந்தளவுக்கு அரசின் கருத்து என்று எமக்குத் தெளிவு இல்லை. அதே சமயம் வேறு ஓர் அமைச்சரும் வேறுபட்ட ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார்.

சாட்சியமளிப்பது என்பது ஒரு பிரஜையின் அடிப்படை உரிமை. ஒரு விசாரணை நடைபெறும் போது சட்ட ரீதியாக அந்த விசாரணை நடக்கும் இடத்திற் குச் சென்று தெரிந்ததைக் கூறுவது ஒரு பிரஜையின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை எவரும் மீறலாகாது. ஐ.நா. விசாரணைக்குழு முன்னிலையில் எவரும் சாட்சியமளிக்கலாம். இதற்கு அரசு தடை போட முடியாது.

ஐ.நா. குழுவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபை மீண்டும் இலங்கை அரசைக் கேட்டிருக்கின்றது.

சாட்சியங்கள் வாக்குமூலமளிப்பதை தவிர்க்கக் கூடிய வகையில் இலங்கை அரச தரப்பினர் செயற்படுவார்களாக இருந்தால் அது ஒரு பாரதூரமான செயலாக சர்வதேச சமூகத்தால் கருதப்படும் என்று நாம் நினைக்கின்றோம். சர்வதேச மட்டத்தில் பெரும் பின்விளைவுளை இலங்கை அரசு சந்திக்கவேண்டி வரும். ஆனபடியால் நடைபெறப் போவதை நாம் இருந்து பார்க்க வேண்டும்.

**கேள்வி:** ஐ.நா. விசாரணைக்குழுவின் இறுதி அறிக்கை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை - தீர்வைப் பெற்றுத்தருமா?

**பதில்:** இந்தக் கேள்விக்கு நேரடிப் பதிலை என்னால் தற்போதைக்கு சொல்லமுடியாது. ஆனால், ஐ.நா. மற்றும் அமெரிக்கா, இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் இலங்கைத் தமிழருக்கு விமோசனம் கிடைக்கும் என்பதனை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். அந்த நம்பிக்கையில் எமது மக்கள் சார்பாக இயன்றதை நாம் செய்துகொண்டிருக்கின்றோம். தொடர்ந்து இதனைச் செய்வோம்.

## J.C.B (பெக்கோ) வாடகைக்கு

குறிப்பு :
போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.



தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்)
077 984 7285 (பருத்தித்துறை)

புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம்.

(49380) (4.6.3)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்

## SKANDA WALK

01.07.2014 செவ்வாய்
7.30 மணிக்கு சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டரிலிருந்து பாடசாலைவரை
அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்கவும்

ஸ்கந்தா சமூகம்

(சி.14825) (45.6.3)

## UNDP நிதி அனுசரணையில்- பதவிவெற்றிடம்

### பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்திற்கு.

பதவி: வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்
இடம்: பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு

**நோக்கம்:**

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் பால் சார் உற்பத்திகளை விற்பனை செய்யக்கூடிய சந்தை வலையமைப்பை உருவாக்குவதனூடாக பண்ணையாளருக்கான பாலின் விலையை அதிகரித்தல்.

**முன்னிலைப்படுத்தப்படும் கடமைப்பட்டியல்:**

- பிரதேசத்தில் பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி பொருள்களுக்கான கேள்வி மட்டத்தைப் பகுப்பாய்வு செய்தல்.
- பால் உற்பத்திகளை விற்பனை செய்யக்கூடிய இடங்களையும் நபர்களையும் அடையாளங் காணல்.
- இரண்டு பிரதான கிளை நிலையங்களுக்குமான கொள்வனவாளர்களை கிளை நிலையங்களுடன் இணைத்தல்.
- உற்பத்திகளைத் தொடர்ந்து கொள்வனவு செய்யக்கூடிய கொள்வனவாளர்களைச் சங்கத்துடன் ஒப்பந்தங்களைச் செய்யக்கூடிய வகையில் ஒருங்கிணைத்தல்.
- பூநகரி பிரதேசம் தவிர்ந்த ஏனைய நகர்ப்புறங்களுக்கும் பால் உற்பத்திகளுக்கான சந்தை பரப்பை விரிவுபடுத்தல்.
- சங்கத்தின் உற்பத்தி பல்வகைத்தன்மையை மேம்படுத்துவதற்கு சங்கத்துடன் ஒத்துழைத்தல்.
- சந்தைப்படுத்தல் மற்றும் ஏனைய சங்கம் சார்ந்த பயிற்சித் திட்டங்களில் பங்கு பற்றல்.
- சந்தைப்படுத்தல் மேம்பாடு சம்பந்தமாக வாராந்தம் மற்றும் மாதாந்தம் அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

**தகைமைகள்:**

- ஆகக் குறைந்தது க.பொ.த (சா/த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
- வேலைகளை முன்னெடுக்கக்கூடியளவில் கணினி மற்றும் ஆங்கில அறிவு இருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்:**

- உந்துருளி செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- தொடர்புடைய அனைத்து தரப்பினருடனும் நல்லுறவைப் பேணுவதுடன் முடிவுகள் எடுக்கும் போது கலந்தாலோசித்தல் வேண்டும்.

உங்கள் சுயவிவரங்களை 13.07.2014 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(41304) (4.3.6)

முகவரி: தலைவர்,
கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம், வாடியடி, பூநகரி.

## பைரவருக்கு இலட்சார்ச்சனை

சாவகச்சேரி, ஜுன் 29

சாவகச்சேரி நுணாவில் மத்தி ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான பைரவப்பெருமானின் இலட்சார்ச் சனை நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன் கிழமை வரையான பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8.30 மணிக்கும், மாலை 5 மணிக்கும் பைரவப் பெருமானுக்கு பஞ்ச விம்சதி கலச சங் காபிஷேகமும், நியாச பூசை, இலட்சார்ச் சனை, விசேட பூசை, வேத பாராயணம் என்பனவும் இடம் பெறும்.

இலட்சார்ச்சனைப் பூர்த்தி தினமாகிய எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பைரவப் பெருமானுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும், மாலை 5 மணி முதல் இலட்சார்ச் சனைப் பூர்த்தியும், திருவூஞ்சல் உற்சவமும் இடம்பெறும். சிவஸ்ரீ தே.பிரசன்னக் குருக்கள் இலட் சார்ச்சனையை நடத் துவார்.

(ஓ)

## வேலையாள்கள் தேவை

முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ளோர், பயில விரும்புவோர் நேரடியாக வரவும்.

1) பார ஊர்தி சாரதிகள்
2) எழுதுவினைஞர்கள் (பெண்கள்) -நாவற்குழியிலிருந்து யாழ்ப்பாணம் வரை விரும்பத்தக்கது.
3) வாகன, மின் இணைப்பாளர்கள்
04) பெயின்ரர் (வாகனம்)
05) வெல்டர், டிங்கர்
06) பிளான்ட் ஒப்ரேட்டர் (பயிலுநர்)
07) கிரேன் ஒப்ரேட்டர்

மாருதி றெடிமிக்ஸ் பிறைவேற் லிமிட்டெட்,
கேரதீவு வீதி, நாவற்குழி, யாழ்ப்பாணம்

(49383) (12.3.6)

## எங்கள் நகர் கிராமசேவகருக்கு எங்களின் பாராட்டுக்கள்



28.06.2014 அன்று தன் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சாவகச்சேரி நகர் கிராமசேவகர்

**வி.சிவசரணநாதன்**

அவர்கள் கடந்த 2007ஆம் ஆண்டு தொடக்கம் நுணாவில் கிழக்கு பிரிவுக்கும், 2010ஆம் ஆண்டு தொடக்கம் சாவகச்சேரி நகர் பிரிவுக்கும் இன்றுவரை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் நெறி தவறாக் கொள்கையோடு மக்களுக்கு அரும்பணியாற்றியமையை இட்டு அக மகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

(சி7710)(12.3.6)

## சாவகச்சேரி நகர் கிராமசேவையாளர் வி.சிவசரணநாதன் அவர்களுக்கு மனம்நிறைந்த பாராட்டுக்கள்



28.06.2014 அன்று ஓய்வுபெற்ற எமது சாவகச்சேரி நகர் கிராம சேவையாளராகக் கடந்த பல வருடங்களாக எமது மக்களுக்கு சேவையாற்றியதோடு மட்டுமல்லாமல் கடந்த காலத்தில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து எமது சாவகச்சேரி நகர் பாடசாலைகளில் ஆயிரக் கணக்கில் தஞ்சம் புகுந்த மக்களை அரவணைத்து பல நாள்களாக இயங்கிய நலன்புரி நிலையங்களை மிகச்சிறப்பாக முன்னின்று நடத்திய பெருமைக்குரிய எமது கிராமசேவையாளர் ஓய்வு பெறுவதையிட்டு மனதார வாழ்த்தி வணங்குகின்றோம்.

சாவகச்சேரி நகர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்

(சி7712)(12.3.6)

## உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்

### யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

BBC 12வது வருடத்தில்

**பாலர் பாடசாலை பிரிவுகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

**கற்பித்தல் மொழி**

ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

**சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்**

2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet * English Day Concert
* முத்தமிழ் விழா * Art & Craft Exhibition
* Carols * Pre School Graduation

**பாட விதானமும் கற்பித்தல் முறையும்**

NEW SYLLABUS
*Dr. Maria Montessori Method
*Canadian ECE Method
*German LKG, KG, UKG System

எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற்கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்க

**பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்**

*கடந்த 11 ஆண்டுகளாக எமது 10 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

(49368) (45.6.3)

**பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்**

*Percussion Band, Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
*குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

**BBC யின் 10 பாலர் பாடசாலை வளாகங்கள்**

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் | வடமராட்சி | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சுபாரத்தினம் வீதி, சுன்னாகம். | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | 1வது மைல்கல், இராச வீதி, நீர்வேலி. |

| சாவகச்சேரி | சங்கானை |
|---|---|
| சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிகர வைரவர் கோவிலடி |

British Business College — Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060

## விற்பனைக்கு/வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, இராசவீதி, 335/23 இலக்கத்தில் அமைந்துள்ள நான்கு அறைகள், மாபிள்பதித்த வரவேற்பு அறை, சுற்றிவர மதில் கொண்ட வீடு உடன் விற்பனைக்கோ/வாடகைக்கோ உண்டு.

071 867 6483 இற்கு தொடர்பு கொள்ளவும்.

(49302) (12.3.6)

## அரிசி ஆலை வாடகைக்கு/குத்தகைக்கு

வவுனியா, ஹொரவபொத்தான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய அரிசி ஆலை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும். இத்துடன் களஞ்சிய அறையும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 757 1889

(43360) (12.3.6)

## வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு
உணவு பரிமாறுபவர்
சிற்றுண்டி, கொத்து றொட்டி தயாரிப்பாளர்கள் தேவை.
தங்குமிட வசதியுண்டு.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 716 2904, 077 757 4752

(49564) (4.3.6)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் - 1981இல் பிறந்த அனுஷம், 8இல் செவ்வாய் 28 ¾ பாவம் - MSC (IT) London P.R உள்ள சைவபோசன மணமகனுக்கு சைவபோசன பட்டதாரிப் பெண் தேவை.

தொடர்பு: 077 899 6281

(49333) (12.3.6)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் - 1984இல் பிறந்த திருவோணம், 11இல் செவ்வாய் 38 ¾ பாவம் - MSC பட்டதாரிக்கு (சைவபோசனம்) டாக்டர், பொறியியலாளர், கணக்காளர் தேவை.

தொடர்பு: 077 899 6281

(49333) (12.3.6)

## வாகனம் விற்பனைக்கு

24 Sri 7274 இலக்க BMCலொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 757 1889

(43359) (12.3.6)

## வீடு, காணி விற்பனைக்கு

வவுனியாவிலிருந்து 7km தொலைவில் நெளுக்குளம் சந்தி நேரியகுளம் வீதியில் பாரதிபுரம் பகுதியில் பஸ்தரிப்பிடத்திற்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட கல்வீடு, கிணறு, தென்னை, மா மரங்களுடன் கூடிய 02 ஏக்கர் (32 பரப்பு) மேட்டு உறுதிக்காணி விற்பனைக்குண்டு. விலை ரூபா 24லட்சம் (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு: 077 247 5739

(43361) (12.3.6)

## வேலணை சங்குதறை ஞானவைரவர் ஆலயம்

### கும்பாபிஷேக தின உற்சவம் 04.07.2014

மேற்படி ஆலய கும்பாபிஷேக தினமாகிய 04.07.2014 வெள்ளிக்கிழமை விஷேட பூஜைகள் இடம்பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இத்தினம் முதல் 14.07.2014 வரையான 11 தினங்களும் அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகள் நடைபெறவிருப்பதால், உபயகாரர்களும் புதிதாகப் பங்குபற்ற விரும்புவோரும் 077 958 6997 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பூஜைகளில் பங்குகொள்ள முடியும் என்பதனை வைரவப்பெருமான் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

சங்குதறை, சரவணை கிழக்கு,
வேலணை.

(49416)(4.6.3)

உற்சவ ஏற்பாட்டாளர்கள்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 174

# பீடைநாசினிகளும் மரக்கறிகளும்

பீடை நாசினித் தாக்கம் அற்ற மரக்கறிகளைப் பாவித்தல். உதாரணமாக கடலை வகை, கௌபி, சிறகவரை, பூசணிக்காய், நீற்றுக்காய், வாழைக்காய், மரவள்ளிக் கிழங்கு, வத்தாளங் கிழங்கு, கருணைக் கிழங்கு, பனங்கிழங்கு, கரட், பீற்றூட் போன்றன.


மனித வாழ்க்கை அமைதியாகவும், சந்தோசம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டுமாயின் நோயற்ற வாழ்க்கை அவசியமாகும். வாழ்வதற்குப் பல்வேறு காரணிகள் முக்கியமானவையாகக் காணப்படினும், ஆரோக்கியமான நிறைவான உணவும், சுத்தமான நீரும் நோயின்றி நீண்டகாலம் உயிர்வாழ இன்றியமையாதவை எனலாம். எவ்வளவு தான் உணவுப் பழக்கவழக்கங்களில் அக்கறை கொண்டிருந்தாலும், நியம முறைப்படி நிறை உணவுக் கூறுகளைத் தேர்ந்தெடுத்தாலும் கிருமிநாசினித் தாக்கமற்ற காய்கறிகளைத் தற்காலத்தில் பெற முடிவதில்லை. அதிகரித்துவரும் பீடை நாசினிப் பாவனையால் தாக்கம் விளைவிக்காத காய்கறி, இலைக் கறி வகைகளைப் பெறுதல் சிரமமானதே.

அதிகரித்துவரும் பீடைத் தாக்கங்களைக் கட்டுப்படுத்த உற்பத்தியாளர்கள் பீடைநாசினிகளைப் பாவிக்க வேண்டிய தேவை உள்ளவர்களாக இருந்தாலும், நுகர்வோர் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. பீடைநாசினிகள் செறிந்த மரக்கறி வகைகளை நீண்ட காலத்துக்கு உண்ணும் போது உடலில் ஆபத்தான நோய்கள் ஏற்படும் சாத்தியம் அதிகரிக்க வாய்ப்பு அதிகம். உடலின் பல்வேறு உறுப்புக்களில் ஏற்படும் புற்று நோய்க்கு உணவினூடாக வந்த பீடைநாசினிகளும் ஒரு காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு கீழ்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

- கிருமிநாசினி விசிறிய பின்னர் இயன்றளவு அதிகரித்த கால இடைவெளியின் பின்னர் சந்தைப்படுத்துதல், கிருமிநாசினி விசிறிய அடுத்த நாளன்றே அதிகமான மரக்கறிகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. ஆனால், பீடை நாசினி விசிறி 14 நாள்களின் பின்னரே பீடை நாசினி நஞ்சு பிரிந்தழிகின்றது என்பதனை யாவரும் கவனத்திற் கொள்ள வேண்டும்.
- அதிகரித்த அளவில் தேவையின்றிப் பீடைநாசினிகள் தெளிப்பதைத் தவிர்த்தல், பீடைநாசினி கொள்கலனில் உள்ள அளவை விட அதிகரித்த அளவில் பாவித்தால் விளைத்திறன் அதிகம் என்ற போலியான நம்பிக்கை உண்டு. எனவே விவசாய வள நிலையங்களின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் பீடை நாசினிகளைப் பாவித்தல் நன்று.



- இரு வேறுபட்ட வகைக் கிருமிநாசினிகளை ஒன்றாகக் கலந்து விசுறுவதைத் தவிர்த்தல். இவ்வாறு கலக்கும்போது இலகுவில் பிரிந்தழியாத கலவையாக மாறி அதிக தீங்கு விளைவிக்கின்றது.
- பூச்சி, பீடைத்தாக்கம் அதிகம் இல்லாத மரக்கறிகளுக்கும் பீடை நாசினி தெளிப்பதைத் தவிர்த்தல். உதாரணமாக: வல்லாரை, கரட், பீற்றூட் போன்றவை.



**நுகர்வோர் காய்கறி வகைகளைப் பயன்படுத்தும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

- எந்தவொரு மரக்கறிகளையோ, இலை வகைகளையோ சுத்தமான நீரில் நன்கு கழுவிய பின்னரே பயன்படுத்துதல் வேண்டும். குறிப்பாகச் சமைக்காது உள்ளெடுக்கும் மரக்கறிகளைக் கழுவுவதில் அதீத கவனமெடுக்க வேண்டும்.
- மரக்கறிகளைக் கூடிய அளவில் திறந்து அவிப்பதன் மூலம் குறிப்பிட்ட அளவு நச்சுத்தன்மை குறைவடைகின்றது.
- மரக்கறிகளை வாங்கியவுடன் சமைப்பதைத் தவிர்த்தல். ஏனெனில் முதல் நாள் பீடை நாசினி விசிறப்பட்டிருப்பின் மறுநாள் சமைப்பதை விட, சில நாள்கள் கழித்துச் சமைக்கும்போது அதன் தாக்கம் குறைவாக இருக்கும்.
- பீடை நாசினிகள் பாவனை அற்ற மரக்கறிகளைப் பாவித்தல். உதாரணமாக கடலை வகை, கௌபி, சிறகவரை, பூசணிக்காய், நீற்றுக்காய், வாழைக்காய், மரவள்ளிக்கிழங்கு, வத்தாளங்கிழங்கு, கருணைக்கிழங்கு, பனங்கிழங்கு, கரட், பீற்றூட் போன்றவை.
- நஞ்சு கொண்ட மரக்கறிகளை உண்ணுவதற்கு மாற்றீடாக ஒவ்வொருவரும் தங்களுக்கென வீட்டுத்தோட்டம் அமைத்தல்.

உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் கொள்வதன்மூலம் ஆரோக்கியமான சமுதாயம் உருவாக வழி செய்யலாம்.

**மருத்துவர் ஆர்.பரமேஸ்வரன்,**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

# நாம் சுகதேகிகளாக வாழ்வதற்கு....

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்". ஆனால் இன்று உலகளாவிய ரீதியில் உடற்பருமன் அதிகரிப்பு, உயர் குருதியமுக்கம் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன. இவ்வாறான, ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு தொற்றா நோய்களின் (Non-Communicable disease) பாதிப்புக்குள்ளானவர்கள் இருதய மற்றும் பல வகையான நோய்த்தாக்கங்களால் இலகுவில் பாதிக்கப்படும் அபாய நிலை உருவாகலாம். எனவே மேற்குறிப்பிட்ட நோய்களின் பாதிப்புக்குள்ளாகாமல் இருப்பதன் மூலமே ஒருவர் சுகதேகியாக வாழ முடியும். புகைத்தல் மற்றும் மதுசாரம் அருந்துதல் என்பனவும் உயிர்க்கொல்லி நோய்களை உருவாக்கும்.

**ஒருவர் எவ்வாறு தனது உடற்பருமனை சாதாரண அளவில் பேணலாம்?**

- உண்மையில் உடற்பருமனானது "உடற்திணிவுச் சுட்டெண் (Body Mass Index BMI) " என்ற அலகினாலேயே அளக்கப்படுகின்றது.
- ஒவ்வொரு மனிதனும் சரியான அளவில் தனது உடற்திணிவுச் சுட்டெண்ணை (BMI) பேணுவதன் மூலம் உடற்பருமனை சாதாரண அளவில் பேணிக்கொள்ளலாம்.
- அவ்வாறாயின், ஒவ்வொருவரும் உடற்திணிவுச் சுட்டெண் பற்றியும், உணவுப் பழக்கங்கள் பற்றியும், உடற்பயிற்சிகள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும்.
- ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களும், உடற் பயிற்சிகளுமே ஒருவரது உடற்பருமனைப் பேணுவதற்கு அடிப்படையான காரணிகளாகும். அத்துடன் புகைத்தல் மற்றும் மது அருந்துதலை முற்றாக நிறுத்த வேண்டும்.

**உடற்திணிவுச் சுட்டெண் (Body Mass Index - BMI) என்றால் என்ன?**

BMI ஆனது ஒருவரது உடல் நிறையையும், உயரத்தையும் அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\text{உடற்திணிவுச் சுட்டெண் (Body Mass Index-BMI)} = \frac{\text{நிறை (Kg)}}{\text{உயரம் (m) x உயரம் (m)}}$$

**BMI பற்றிய சாதாரண அளவுகள் என்ன?**

- ஆசியாக் கண்டத்தில் வசிக்கும் மக்களின் BMI எவ்வளவாகப் பேணப்பட வேண்டும் என்பது பற்றி பின்வருமாறு கூறுகின்றது.
- BMI ஆனது 18.4kg/$m^2$ இற்கு குறைவாக இருந்தால் அவர் குறைவான உடற்பருமன் உடையவராக (Under weight) கருதப்படுவார்.
- அதே சமயம் BMI ஆனது 18.5kg/$m^2$ தொடக்கம் 23 kg/$m^2$ வரையானவர்கள் சாதாரண உடற்பருமனுடையவர்களாக கருதப்படுவர்.
- ஆனால் BMI ஆனது 23kg/$m^2$ தொடக்கம் 27.5kg/$m^2$ இற்கு வரையானவர்கள் அதிக உடற்பருமனுடையவர்களாகவும் (Over weight) 27.5 kg/$m^2$ இற்கு மேற்பட்டவர்கள் மிகவும் அதிகளவு உடற்பருமனுடையவர்களாகவும் (Obese) கருதப்படுவர்.
- எனவே ஒவ்வொருவரும் தமது BMI ஐ கணக்கிட்டு, அதை 18.5kg/$m^2$ இல் இருந்து 23kg/$m^2$ வரையில் பேணிக்கொள்வது அத்தியாவசியமாகின்றது.

**BMI ஆனது 18.5kg/$m^2$ இல் குறைவாக (Under weight) இருந்தால் எவ்வகையான பாதிப்புக்கள் ஏற்படும்?**

- இவர்கள் உடற்பருமன் குறைந்தவர்கள் (Under weight) என அழைக்கப்படுவர்.
- இவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கலாம். இதனால் அடிக்கடி கிருமித் தொற்றுக்கு உள்ளாக நேரிடும்.
- இவர்களுக்கு குருதிச் சோகை நோய் (Anemia) ஏற்படலாம். எனவே அதிக களைப்பு, மறதி, வினைத்திறனுடன் வேலை செய்ய முடியாமை போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.
- மற்றும் என்புருக்கி (Osteoporosis) நோய் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்படலாம். இதனால் மூட்டு நோ, உடல் நோ, முறிவு போன்ற பிரச்சினைகள் உருவாகும்.

**BMI ஆனது 23kg/$m^2$ இலும் அதிகமாக (Over weight / Obesity) இருந்தால் எவ்வகையான பாதிப்புக்கள் உருவாகும்?**

- இவர்களே பல வகையான தொற்றா நோய்களால் (Non - Communicable disease) பாதிக்கப்படும் அபாயமுடையவர்கள்.
- உயர் குருதியமுக்கம், நீரிழிவு, மாரடைப்பு, அதிக கொலஸ்ரோல், பாரிசவாதம் போன்ற ஆட்கொல்லி நோய்களின் தாக்கங்கள் இவர்களை இலகுவாக ஆட்கொள்ளும்.
- மற்றும் சாதாரண சுவாசத்தில் பிரச்சினைகள், கருக்கட்டல்/குழந்தை பெறுவதில் பிரச்சினைகள், சிறுநீரக நோய்கள், மூட்டு வாதங்கள் மற்றும் சில வகையான புற்று நோய்களாலும் இலகுவில் பாதிக்கப்படும் நிலை உருவாகக் கூடும்.

**BMI ஐ சாதாரண அளவில் (18.5-23kg/$m^2$) எவ்வாறு பேணிக்கொள்ளலாம்?**

- BMI ஆனது 18.5kg/$m^2$ இலும் குறைவானவர்கள் தங்களது உடற்பருமனை (Weight) படிப்படியாக அதிகரிப்பதன் மூலம் தமது BMI ஐ சாதாரண அளவுக்கு உயர்த்த வேண்டும். இதற்கு ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். தங்களின் BMI ஆனது குறைவாக இருந்தால் அருகிலுள்ள வைத்தியரினதும், சத்துணவியல் ஆலோசகர் (Dictitian) ஆலோசனையைப் பெறுவதும் அத்தியாவசியமாகும்.
- BMI ஆனது சாதாரண அளவில் இருப்பவர்களும், அதைத் தொடர்ச்சியாக சாதாரண அளவிலேயே பேணிக்கொள்ள வேண்டும். இவற்றுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களும், உடற்பயிற்சிகளும் அவசியமாகின்றன.
- அதே சமயம் BMI ஆனது 23 kg/$m^2$ இலும் அதிகமாக இருந்தால் (Over weight / Obesity) அவர்களும் தமது உடற் பருமனை (Weight) குறைப்பதன் மூலம் சாதாரண BMI ஐ அடையலாம். இதற்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களும், உடற்பயிற்சிகளும் அத்தியாவசியமாகின்றன. இவர்களும் அருகிலுள்ள வைத்தியர் மற்றும் சத்துணவியல் ஆலோசகரின் (Dietitian) ஆலோசனையைப் பெறுதல் அத்தியாவசியம்.

**உடற்பருமனை அளவிடுவதற்கு BMI ஐ தவிர வேறு ஏதாவது முறைகள் உள்ளதா?**

- BMI என்பது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும்.
- ஆனால் ஒருவரின் இடுப்புச் சுற்றளவை (Waist Circumference) அளப்பதன் மூலமும் அவர் உடற்பருமன் கூடியவரா என்பதை அறியலாம். சாதாரணமாக ஆண்களின் இடுப்புச் சுற்றளவு 90cm இற்கு மேற்படாமலும், பெண்களின் இடுப்புச் சுற்றளவு 80cm இற்கு மேற்படாமலும் இருத்தல் நன்று. மேற்குறிப்பிட்ட அளவுகளை விட அதிகமாக தங்களின் இடுப்புச் சுற்றளவு இருக்குமாயின் நீங்களும் அதிக உடற்பருமனுடையவர்களாகவே கணிக்கப்படுவீர்கள்.
- மேலும் தற்போது கழுத்துச் சுற்றளவை அளப்பதன் மூலமும் ஒருவரது உடற்பருமனை அளவிடலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனினும் எமது மக்களுக்கான கழுத்துச் சுற்றளவானது எவ்வளவாக இருக்க வேண்டும் என்பது பற்றிய திட்ட வட்டமான அளவுகள் இன்னமும் ஆய்வுகள் மூலம் கணிக்கப்படவில்லை.

(தொடரும்...)

**மருத்துவர் P. மயூரதன் MBBS, MD,**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பு அரசு மனம்மாற வேண்டும்

இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்களாக வர்ணிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த விசாரணைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஆரம்பித்து விட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையாளர் அலுவலகம் இந்த விசாரணைக்காக 12 அலுவலர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்ததுடன் அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு சர்வதேச ரீதியில் மிகக் காத்திரமான நிபுணர்கள் மூவரை ஆலோசர்களாக நியமித்துள்ளது. மார்ட்டி அத்திசாரி, சில்வியா கார்ட்ரைட், அஸ்மா ஜெகாங்கீர் ஆகியோரின் வழிகாட்டல்களுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொடர்பாக விசாரிக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகக் குழுவின் சர்வதேச தரம் மற்றும் அதன் மதிப்பு என்பவை குறித்து எழுப்பப்பட்ட சர்ச்சைகளுக்கு ஆணையாளர் நவிப்பிள்ளை சரியான - திறமையான விதத்தில் பதில் கொடுத்துள்ளார். இப்போது இந்த விசாரணைகளை யாரும், இது வெறும் அதிகார மட்ட விசாரணைகள் என்று புறமொதுக்கிவிடமுடியாது. அதேபோன்று இதன் நிபுணத்துவத் தகுதி குறித்தும் கேள்வி எழுப்ப முடியாது.

இதன் மூலம், இந்த விசாரணை ஒரு சர்வதேசத் தரம் வாய்ந்தது அல்ல என்று முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும் அடிபட்டுப் போயுள்ளன.

பாகிஸ்தானில் ஓர் ஆட்சியையே தூக்கி எறிந்து மாற்றியமைத்த துணிவு கொண்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்தவர் அஸ்மா ஜெகாங்ஹீர். அரசுகளின் நெளிவு சுழிவுகளுக்கு வளைந்துகொடுக்காமல் சட்டத்தை நிலைநாட்டுவதில் அவருக்குள்ள தற்துணிபுக்கு இதைவிடச் சான்று தேவையில்லை. அத்துடன் பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் மேற்கொள்ளும் அத்துமீறிய குடியேற்றங்கள் குறித்து உண்மையைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐ.நா. குழுவில் பணியாற்றியவர்.

சில்வியா கார்ட் ரைட் நியூஸிலாந்து உயர் நீதிமன்றத்தின் நீதியரசர். கம்போடியாவில் நடந்த குற்றங்கள் தொடர்பான விசாரணைக் குழுவில் இடம்பெற்றிருந்தவர். பெண்களுக்கு எதிரான பாரபட்சங்கள் குறித்த ஐ.நா. குழுவிலும் பங்கெடுத்தவர்.

மார்ட்டி அத்திசாரி பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி என்பதுடன், நோபல் அமைதிப் பரிசு வென்றவரும்கூட. இவர்கள் அனைவரதும் ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும் மேற்கொள்ளப் படக்கூடிய விசாரணையானது நிச்சயமாக நீதியானதாகவும், நியாயமானதாகவும், பக்கச் சார்பற்றதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அப்படிப்பட்ட ஒரு விசாரணைக்கு - அப்பழுக்கற்ற முடிவுகளைத் தரக்கூடிய ஒரு விசாரணைக்கு அரசு ஒத்துழைக்க மறுத்திருப்பது இலங்கை மக்களின் துரதிர்ஷ்டமே. அந்த விசாரணையின் முன் சாட்சியமளிக்கக்கூடாது என்று தமிழர்களை மிரட்டுவது அதைவிடவும் கொடுமையான அடக்குமுறை.

புரியப்பட்ட குற்றங்களின் மீது நீதியை நிலைநாட்டி, இலங்கை நாட்டில் அமைதியைக் கொண்டு வர சர்வதேசம் முன்னெடுக்கும் முயற்சிகளைப் புறந்தள்ளியும் சாட்சிகளை மிரட்டியும் கொழும்பு அரசு மீண்டும் மீண்டும் குற்றங்களைப் புரிவது நல்லதல்ல. விசாரணைக்கு ஒத்துழைத்து குற்றவாளிகளை இனங்கண்டு அவர்களை நீதியின் முன் நிறுத்திய பின்னர், குற்றவாளிகள் ஒருவேளை அரசுக்கு மிக வேண்டியவர்களாக இருந்தால் அவர்கள் தொடர்பில் மேற்கொண்டு என்ன செய்வது என்று தமிழர்களுடனும் பாதிக்கப்பட்ட மக்களுடனும் மனந்திறந்து பேசுவதே சிறந்தது. இவற்றைக் கருத்தில் கொண்டு கொழும்பு அரசு மனம்மாற முயற்சிக்க வேண்டும்.

# ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் தடுமாறும் அமைச்சர் ஹக்கீம்

## முஸ்லிம் அரசியல்வாதிகளின் அடுத்த நகர்வு என்ன?

கந்தவனம் கோணேஸ்வரன்


தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பரந்தளவிலான இனக்கலவரம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. நாட்டுக்கு விசுவாசமிக்க பிரஜைகளாக வாழ்கிறோம்; சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமையைப் பேணுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்த முஸ்லிம்கள் தங்கள் உறவுகளையும் உடைமைகளையும் காவு கொடுத்துவிட்டு நிர்க்கதியாகி நிம்மதியின்றித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் அரசியல் புத்திசாலித்தனங்களால் முஸ்லிம் மக்களைக் காப்பாற்றுவதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டு தத்தமது வசதிகளைப் பெருக்குவதில் அக் கறைகொள்ளும் முஸ்லிம் அரசியல்வாதிகள் எவற்றைக் கூறி முஸ்லிம் மக்களை நம்பவைத்துத் தங்கள் வழமையான அரசியலைத் தொடரலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிவியா நாட்டின் துணை ஜனாதிபதியிடமிருந்து அந்நாட்டின் அதியுயர் விருதை 'சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான காவலன்' என்ற புகழாரங்களுடன் பெற்றுக்கொள்கின்ற வேளையில், இலங்கையில் முஸ்லிம்கள் தாங்கள் எந்தக் கணத்திலும் கொல்லப்படலாம் என்று அவலக் குரல்களிடையே தவித்துக்கொண்டிருந்தமை ஒன்றுக்கொன்று முரணான நிலை எனக் கொள்ளத்தக்கதாகும்.

நாட்டின் தலைமையைக் காட்டிக் கொடுக்காதவர் அமைச்சர் ஹக்கீம். உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்வதால் பயனில்லை என அவ்வப்போது பட்டும் படாமலும் தமிழர்களுக்கும் அறிவுரை சொல்லிவருபவர் அவர். சிறுபான்மை இனங்களின் காவலர் மஹிந்த ராஜபக்ஷ என்பதற்குச் சாட்சியாகப் பல நாடுகளுக்கும் சென்று சாட்சி கொடுத்தவர் அவர். இன்று கதிகலங்கிப்போய்நிற்கிறார். மிகவும் நல்லவராக அரசுடன் ஒட்டிக் கொண்டிருந்து சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் முஸ்லிம் தலைவர்கள் இன்று தமது மக்களிடம் முகங்கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு முன்புகூட அமைச்சர் ஹக்கீம் அமைச்சுப் பதவியில் நீடிக்கலாமா என்பதுபற்றிய சந்தேகங்களைப் பல தடவைகள் வெளியிட்டிருக்கிறார். ஆனால், இரண்டொரு நாள்களிலேயே தடாலடிக் குத்துக்கரணங்களையும் செய்திருக்கிறார். நான் பதவி விலகுவேன் எனப் பலபேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள், அதற்கு நாம் இடம்கொடுக்க முடியாதென்பார். பதவி விலகுவது என்பது எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்துவிடக்கூடிய காரியமல்ல. விளைவுகளை அனுசரித்துப் பவ்விய மாகக் கையாளவேண்டிய ஒரு விடயம் என்றும் கூறுவார். கடைசியில் பதவி விலகவே மாட்டார் என்பது உறுதியாகிவிடும்.



அதேபோல் இப்போதும் நீதி அமைச்சராக இருப்பதையிட்டு வெட்கப்படுகிறேன் என்று வாய்விட்டுக் கூறியிருக்கிறார். இவை உள்ளத்திலிருந்துவந்த வார்த்தைகளா? அல்லது மக்களின் உணர்வுகளைச் சமாளிப்பதற்காக உதிர்க்கப்பட்ட வார்த்தைகளா? என்பது அடுத்துவரும் நாள்களில் தெரிந்துவிடும்.

அளுத்கம, பேருவளை அசம்பாவிதங்களையடுத்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மலேசியா, கட்டார், குவைத், ஈரான் ஆகிய ஆறு நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பொன்றை ஏற்படுத்தி முஸ்லிம் மக்களுக்கு நடந்த அநியாயங்கள் பற்றி விளக்கமளித்திருக்கிறார் அவர். கடந்த திங்கள் மாலை ஹக்கீமின் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலியும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜமீலும் உடனிருந்திருக்கிறார்கள். முஸ்லிம் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடுமைகளுக்கு நிச்சயமாக நடவடிக்கைகள் எடுப்போம் என்று சந்திப்பில் கலந்து கொண்ட தூதுவர்கள் ஹக்கீமிடம் உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள்.

இலங்கை அரசு இதுபோன்ற கொடுமைகளைத்தான் தமிழர்களுக்கு ஏற்கனவே செய்திருந்தது. 58இல், 77இல், 78இல், 83இல் எனத் தமிழர்கள் பாதிக்கப்பட்டபோது தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு எந்த முஸ்லிம் அரசியல்வாதியும் முன்வரவில்லை. மாறாக, அமைதியாக இருந்து தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொண்டும் அவசர காலச் சட்டத்துக்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்துக்கொண்டும் காலந் தள்ளிய முஸ்லிம் அரசியல்வாதிகளைத் தான் தமிழர்கள் கண்டிருக்கிறார்கள்.

அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ்ப் போராளிகள் தோற்றம்பெற்று அரச படைகளைப் பின்வாங்கச்செய்த காலங்களில் அரசு இழுத்த இழுப்புக்கெல்லாம் முஸ்லிம் இளைஞர்களை இழுத்துவிட்டு ஊர்காவற்படை என்ற பெயரில் அவர்களை ஆயுதம் தூக்கவைத்துத் தமிழர்களின் ஆயுத போராட்டத்துக்கு இடையூறு உண்டுபண்ணி அரசின் விருப்பப்படியே தமிழர் - முஸ்லிம் உறவுகளைச் சீர்கெடச் செய்தவர்கள் இவர்கள். ஊர்காவற்படையில் சேர்ந்து ஆயுதமேந்திய முஸ்லிம் இளைஞர்களின் துப்பாக்கிகள் ஆரோக்கியமான தமிழர் - முஸ்லிம் உறவுக்கு வேட்டு வைத்ததைத் தவிர, வேறு எதைச் சாதித்தன.

2009இற்குப் பிறகு சிங்கள மேலாண்மையின் தாக் க்ம் முஸ்லிம்களின் மீதே அதிகம் செலுத்தப்பட்டிருக்கிறது. பொதுபல சேனாவின் தோற்றம் சிறுபான்மையினருக்கு எதிரானது என்பதைவிட முஸ்லிம்களுக்கு எதிரானது என்பதே நடைமுறையில் உணர்த்தப்பட்டு வருகிறது. சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்ந்தால் அரசின் அரவணைப்பு நிச்சயமாக தம்மைப் பாதுகாக்கும் என்று நம்பியிருந்த முஸ் லிம் மக்கள் பொதுபல சேனாவின் தோற்றத்துக்குப் பிறகு அந்த நம்பிக்கையைஇழந்து கொண்டிருக்கிறார்கள்.



பொதுபலசேனா முதலில் முஸ்லிம்களின் உணவுமுறையில் கைவைத்தது. முஸ் லிம் தலைவர்கள் எல்லோரும் ஆக்ரோஷ மான அறிக்கைகளை வைத்துப் பம்மாத் துக் காட்டினார்கள். ஆனால், இறுதியில் வெற்றி பெற்றவர்கள் பொதுபல சேனாவினர்தான். முஸ்லிம் தலைவர்கள் வார்த்தை ஜாலங்களால் தம்மைக் குளிப்பாட்டி புனிதர்களாக்கிக் கொண்டார்கள்.

அடுத்து பள்ளிவாசல்களில் கைவைத்தார்கள். எமது உயிரிலும் மேலானது சமய நெறி என்று மேடைகளில் முழங்கிய முஸ்லிம் அரசியல்வாதிகள், மக்களே அமைதியாக இருங்கள்; நாங்கள் நல்ல முடிவைக் காண்போம் என்றெல்லாம் கூறினார்கள். இறுதியில் பொதுபலசேனா இலக்கு வைத்த செயற்பாடுகள் அனைத்தும் வெற்றிகொள்ளப்பட்டன. முஸ்லிம் தலைவர்கள் தோல்விகளுக்குச் சமாதா னம் கூறிக்கொண்டார்கள்.

ஓரினத்தின் தலைமைப் பொறுப்பிலிருப்பவர்கள் அந்த இனத்தின் பாதுகாவலர்களாகச் செயற்படவேண்டும். மக்களின் இன்ப, துன்பங்களில் பங்கேற்பவர்களாக இருக்கவேண்டும். ஆனால், முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களின் தலைவர்கள் முஸ்லிம்களின் தலைவர்களாக அல்லாது அரச தலைவர்களாகவே செயற்பட்டுவருகிறார்கள். இதுதான் பிரச்சினை.

அளுத்கம, பேருவளை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் எதேச்சையாக நிகழ்ந்தவையல்ல. "முஸ்லிம்கள் தங்கள் மேல் கல்லெறிந்தார்கள். அதனால் சிங்கள இளைஞர்கள் கோபமடைந்தார்கள்" என்று பொதுபலசேனா தேரர் சொல்வது நம்பும்படியாக இல்லை. ஒருசிலர் கல்லெறிந்தால் அவர்கள் சார்ந்த இனத்தின் கடைகளை எரிக்கவேண்டும்; வீடுகளை உடைக்க வேண்டும்; உடைமைகளைக் கொள்ளையிடவேண்டும்; உயிர்களைப் பலி எடுக்க வேண்டும் என்று எந்தப் போதனைகளிலும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளையடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச் சர்பதவியையும் வேறு இரு அமைச்சுப் பதவி களையும் ஐந்து வருடங்களுக்கும் தருகிறோம். தமிழர்களுடன் இணைந்து ஆட்சி அமையுங்கள் எனக் கோரியிருந்தார். அவரது கோரிக்கையைப் புறக்கணித்த அரசியல் தந்திரத்துக்கு இன்று கிழக்கு மாகாண சபையில் பலத்த அடி கிடைத்திருக்கிறது.

எது எவ்வாறாயினும், சிறுபான்மைத் தேசிய இனங்கள் என்ற வகையிலும் ஒரு மொழி பேசும் இனம் என்ற முறையிலும் தமிழர்களுடன் இணைந்து போராட வேண்டிய நியாயமும் தேவையும் முஸ்லிம்களுக்கும் இருக்கிறது. அவர்கள் போராடினாலும் அல்லது போராடாமல்விட்டாலும் தமிழர்களின் போராட்டம் வெற்றிபெறும்போது அந்த வெற்றியின் பயன்கள் முஸ்லிம்களுக்கும் உரித்தாகத்தான் போகின்றன. முஸ்லிம்களுக்காக உள்ளார்த்தமாகக் குரல்கொடுப்பதற்கான வல்லமையும், கடமையும், உரிமையும் தமிழர்களுக்கு இருக்கிறது. அதனைத் தமிழ்த் தலைவர் கள் எப்போதும் சரியாகவே செய்துவந்திருக் கிறார்கள். எதிர்காலத்திலும் அவ்வாறே செய்வார்கள். இதனை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொண்டால் எல்லோருக்கும் நல்லது.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் சாரதி அனுமதி

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் அவர்களுக்கான



சாரதி அனுமதிப்பத்திரத்தை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து விநியோகிக்க நடடிக்கை எடுத்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இத்திட்டத்தினால் சுற்றுலாப் பயணியொருவர் விமான நிலையத்தில் இருந்தே வாடகைக்குவாகனம்ஒன்றைப் பெற்றுத் தாமே வாகனத்தை செலுத்திய வாறு நாட்டை சுற்றிப்பார்க்க முடியும்.

சுற்றுலாப்பயணி தமது நாட் டில் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தை எமது கருமபீடத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் இலங்கையில் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை பத்து நிமிடங்களுக்குள் பெற்றுக்கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

தற்போது வெளிநாட்டவர்களுக்கான ஒருநாள் சேவை எமது வேஹேர ஹெரவில் இடம் பெற்றபோதிலும் சுற்றுலாப் பயணிகளின் அசௌகரியத்தை கட்டுப்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது இந்தச்செயற்றிட்டத்திற்கான அனுமதி திறைசேரியிடமிருந்து கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த)



# கொமர்ஷல் வங்கியின் லீசிங் வட்டி குறைப்பு

லீசிங்களுக்கான தனது வட்டி வீதத்தைக் குறைத்துள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

லீசிங் சந்தையில் தற்போது ஆகக் குறைந்த வட்டி வீதத்தை தாமே வழங்குவதாக வங்கி அறிவித்துள்ளது.

புத்தம் புதிய மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களைக் கொள்வனவு செய்ய தற்போது வாடிக்கையாளர்கள் லீசிங்குகளுக்கு விண்ணபிக்கலாம்.

பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான வாடகைக் கொள்வனவுக்கும் தற்போது விண்ணப்பிக்கலாம். அதேபோல் இயந்திரங்களைக் கொள்வ னவு செய்யவும் வங்கி தற்போது லீசிங் வசதிகளை வழங்குகின்றது.

பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான லீசிங் கட்டணம் தற்போது ஒரு லட்சம் ரூபாவுக்கு 2,202 ரூபா என்ற ரீதியில் ஐந்தாண்டுகளுக்கு அமைந்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு அதே ஐந்தாண்டு வசதியுடன் ஒரு லட்சம் ரூபாவுக்கு 2,350 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மகிந்திரா ரக வாகனங்களை லீசிங் முறையில் கொள்வனவு செய்ய ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனத்துடன் கொமர்ஷல் வங்கி விசேட உடன்பாடுகளையும் செய்து கொண்டுள்ளது.

சுசுகி, நிஷான் பெற்றோல் ரக வாகனங்கள், நிஷான் ஓ டிரையில் வாகனங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்ய உடன்பாடுகள் உள்ளன.

இதன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் வாகனங்களுக்கு விசேட விலை கழிவுகளையும் மேற்படி நிறுவனங்கள் வழங்குகின்றன. (த)



யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அலியான்ஸ் யாழ்.வலய கிளையின் வாடிக்கையாளராகிய அமரர் சகாதேவன் ரவிக்குமார் அவர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவை சிரேஷ்ட காப்புறுதி ஆலோசகர் மே.ஜெசிந்திரன் வாடிக்கையாளரது சகோதரி சசிகலா சகாதேவனிடம் வழங்குவதையும் அருகில் யாழ். வலயக் கிளை சிரேஷ்ட முகாமையாளர் திரு.மு.மகேந்திரராஜ், வணிக சந்தைப் படுத்தல் முகாமையாளர் வி.நிதர்ஷன் ஆகியோரையும் காணலாம். (த)

# சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தால் இலங்கைக்கு கடனுதவி அதிகரிப்பு

உலக வங்கிக் குழுமத்தின் ஒரு அங்கத்துவ ஸ்தாபனமான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் இலங்கையில் நுண் மற்றும் சிறிய வர்த்தக முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் நோக்குடன் நெசனல் டெவலப்மன்ட் வங்கியினூடாக தனது இலங்கைக்கான நிதியளித்தலை மேலும் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கின்றது.

பல்வேறு அபிவிருத்தி சார் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட அதிரிக்கப்பட்ட இந்த நிதியானது இந்த வருடத்தின் ஆரம்பத்தில் கையொப்ப மிடப்பட்ட பாரிய ஒருங்கிணைக்கப்பட்ட நிதியுதவித் தொகுப்பின் ஒரு அங்கமாக விளங்குவதுடன், 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற முழுமையான நிதியுதவிப் பொதியினை வழங்குகின்றது.

நீண்ட கால அடிப்படையிலான இந்த நிதியளிப்பு தொகுப்பானது 2018 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உள்ள 3,000 நுண் மற்றும் சிறிய அளவு வர்த்தக முனைப்பாளர்களுக்கு தேவையான நிதியளிப்பு சேவைகளை அளிக்கும் வங்கியின் நோக்கத்துக்கு ரீதியில் கடனுதவி வழங்குவதான எமது முனைப் பினை மேலும் முன்னெடுப்பதான எம் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கிடைத்த ஆதாரமாக நாங்கள் கருதுகின்றோம் என என்.டி.பி. பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ராஜேந்திரா தியாகராஜா குறிப்பிட்டார்.

சர்வதேச நிதிக் கூட்டுத்தா

சிறிய வர்த்தக முயற்சியாளர் களுக்கு நிதியுதவி வழங்கும் நோக்குடன் நெசனல் டெவலப் மன்ட் வங்கியினூடாக தனது இலங்கைக்கான நிதியளித்தலை மேலும் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கின்றது.




பனத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இந்த கடன் தொகுப்பானது நாட்டில் முன்னெடுக்கப்படும் பாரிய ஒருங்கிணைக்கப்பட்ட கடன் வசதிகளில் ஒன்றாக உதவியாக அமையும் என நம்பப்படுகிறது.

இந்த நிதியளிப்பானது சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் இன் நிதித்தொகுப்பினை முழுமையாக்கும் இந்த மேலதிக தொகையானது நாடளாவிய விளங்குகின்றது. (த)

# மலிபன் ஸ்மார்ட் கிறீம் க்ரகர், அஸ்ட்ரா ஆகியன இணைந்து வழங்கும் மகிழ்ச்சியும் போசாக்கும்




உலகம் முழுவதிலும் உள்ள இலங்கையர்கள் மத்தியில் வயது வேறுபாடின்றி பிரசித்தி பெற்ற நாமங்களாக அஸ்ட்ரா மாஜரீனும் மலிபன் ஸ்மார்ட் கிறீம் க்ரகரும் விளங்குகின்றன.

தனது குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான போசாக்கு அனைத்தும் குழந்தைக்குக் கிடைப்பதை உறுதி செய்வது ஒவ்வொரு தாய்க்கும் முக்கிய கடமையாக விளங்குகின்றது.

ஆனால் இந்தப் போசாக்கு உணவுகளை குழந்தைகள் விரும்புகின்றார்களா என்பதே இங்குள்ள பிரதான சவால். போசாக்கும் குழந்தைகள் விரும்பும் சுவையும் கொண்ட உணவு ஒன்றைத் தாய்மாருக்கு அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட இலங்கையின் மிகவும் நம்பகத் தன்மையான குறியீட்டு நாமங்களான மலிபனும் அஸ்ட்ராவும் ஒன்றிணைந்து போசாக்கும் சுவையும் நிறைந்த சிற்றுணவு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளன.

தரத்துக்குப் பெயர் பெற்ற மலிபனும் அஸ்ட்ராவும் தலைமுறைகள் கடந்தும் விரும்பப்பட்டு வரும் சிறந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட நாமங்கள். உலகம் முழுவதிலும் உள்ள இலங்கையர்கள் மத்தியில் வயது வேறுபாடின்றி பிரசித்தி பெற்ற நாமங்களாக அஸ்ட்ரா மாஜரீனும் மலிபன் ஸ்மார்ட் கிறீம் க்ரகரும் விளங்குகின்றன.

தரத்துக்கும் சுவைக்கும் பெயர் பெற்ற இரு நாமங்கள் ஒன்றிசை [illegible] பொழுது அது வழங்கும பெறுபேறும் அபரிதமாக விளங்கும். இந்த வகையில் புத்தம் புதிய மொறுக் மொறுக் சுவைக்கு புகழ்பெற்ற மலிபன் ஸ்மார்ட் கிறீம் க்ரகர் உடன் வளரும் குழந்தைகளுக்குத் தாய்மார் நம்பிக்கையுடன் தெரிவு செய்யும் அஸ்ட்ரா மாஜரீன் இணைந்து மனதுக்கினிய சுவையான புதிய போசாக்குணவை அறிமுகப்படுத்தியுள்ளன.

இரண்டு முதன்மை நிறுவனங்கள் இணைந்து நாட்டின் பிரபல குறியீட்டுப் பெயர்களை ஊக்குவிக்கும் முன்னெடுப்பை மேற்கொள்வது இலங்கையில் இதுவே முதல் தடவை.

இந்த இரண்டு குறியீட்டுப் பெயர்களும் ஒன்று சேர்ந்து இவற்றின் மீதான வாடிக்கையாளரின் விருப்பத்தை அதிகரிக்கச் செய்யும் என நம்புகின்றோம் என யுனி[illegible] உணவு சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ரமணி சமரசுந்தர தெரிவித்தார்.

இந்த இரண்டு குறியீட்டுப் பெயர்களும் ஒன்று சேர்ந்து வழங்கும் புதிய சுவையை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் முன்னெடுப்பானது அனைவரையும் கவரும் தொலைக்காட்சி விளம்பரம் ஊடாக ஆரம்பிக்கவுள்ளது. அது மட்டுமன்றி இந்த ஊக்குவிப்புத் திட்டத்தில் உள்ளடங்கும் நிகழ்வுகள் பலவற்றை வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கலாம்.

ஆ.ஜென்சன் றொனால்ட்
பொது சுகாதார பரிசோதகர்

# தொற்றா நோய்களின் அபாயத்தைத் தடுக்க

## விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. ஆனால் நோயின்றி வாழ என்ன செய்ய வேண்டும் என்பது பலருக்குத் தெளிவாகப் புரிவதில்லை. எனவே நாம் ஆரோக்கியமாகவும், சுகாதாரமாகவும் வாழ அது பற்றிய அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உலக சுகாதார நிறுவனம் "சுகாதாரம்" என்பதைப் பின்வருமாறு வரையறை செய்துள்ளது. "நோய்களற்ற நிலையோ அல்லது அங்கவீனமற்ற நிலையோ மட்டுமன்றி ஒருவரின் உடல், உள, சமூக மற்றும் ஆன்மிக நன்நிலையே சுகாதாரமாகும்." என்பதே அதுவாகும்.

ஒருவரின் சுகாதார நிலையைப் பாதிக்கின்ற காரணிகளை இரு வகையாக வேறுபடுத்தி நோக்கலாம். ஒன்று தொற்றுநோய்கள் (Communicable diseases) மற்றையது தொற்றா நோய்கள் (Non Communicable diseases) என்பனவாகும்.

தொற்று நோய்கள் என்பவை ஒருவரிடமிருந்து நேரடியாகவோ அல்லது காவிகளூடாகவோ இன்னொருவருக்கு தொற்றக்கூடிய நோய்களாகும். உதாரணமாக காசம்- காற்றின் மூலமும், நெருப்புக் காய்ச்சல்- நீர் மூலமும், சிரங்கு- தொடுகை மூலமும் அந்தந்த நோய்க் கிருமிகளின் காரணமாக ஏற்படுகின்றன.

ஆனால் தொற்றா நோய்கள் என்பவை நோயுடைய ஒருவரிடமிருந்து நேரடியாகவோ அல்லது காவிகளூடாகவோ இன்னொருவருக்குத் தொற்ற முடியாத நோய்களாகும். உதாரணமாக நீரிழிவு, புற்றுநோய் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தொற்றா நோய்கள் ஒரு தனிநபரின் பின்னணிக் காரணிகளாலும், வாழ்க்கைப் பாணியினாலும் மற்றும் சூழல் காரணிகளாலும் ஏற்படுகின்றன. பெரும்பாலும் தொற்றா நோய்களாக உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், புற்றுநோய், நீண்டகால சுவாசநோய்கள், நீரிழிவு, பாரிசவாதம், நீண்டகால சிறுநீரக நோய்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விவரப்படி உலகில் நிகழும் இறப்புகளில் 60 வீதத்துக்கும் அதிகமானவை தொற்றா நோய்களினாலேயே நிகழ்கின்றன. அதாவது 36 மில்லியன் மக்கள் ஆண்டு தோறும் தொற்றா நோய்களினால் மடிகின்றனர். இது அடுத்த பத்தாண்டுகளில் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வருடந்தோறும் 5 மில்லியன் மக்கள் புகைப்பொருள் பாவனையாலும், 2.8 மில்லியன் மக்கள் அதிக உடல் எடை காரணமாகவும், 2.6 மில்லியன் மக்கள் உயர் கொலஸ்ரோலினாலும், 7.5 மில்லியன் மக்கள் உயர் குருதி அமுக்கத்தாலும் மடிகின்றனர்.

2020 ஆம் ஆண்டளவில் பத்து இறப்புகளில் ஏழு இறப்புகள் தொற்றா நோய்களினாலேயே ஏற்படுமெனவும், 2030 ஆம் ஆண்டளவில் தொற்றா நோய்களால் ஏற்படும் இறப்புகள் வருடத்துக்கு 52 மில்லியனை எட்டிவிடும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த வகையில் முன்னைய காலங்களில் பணக்காரர்களின் நோய் என வர்ணிக்கப்பட்ட தொற்றா நோய்கள் இன்று அபிவிருத்தி அடைந்து வரும், வறிய நாடுகளில் அதிகரித்துள்ளமை கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

**ஆபத்துக் காரணிகளைக் கட்டுப்படுத்தல்**

தொற்றா நோய்க்கான ஆபத்துக் காரணிகளில் ஒரு நபரின் பின்னணிக் காரணிகளாகிய வயது, பால், பரம்பரை அலகு என்பவற்றின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த முடியாவிடினும் ஏனைய காரணிகளான வாழ்க்கைப் பாணி, சூழல் காரணிகள் மற்றும் மன அழுத்தம் என்பவற்றை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு ஆபத்துக் காரணிகளை குறைப்பதன் மூலம் 80 வீதத்துக்கும் அதிகமான அளவுக்கு இதய நோய்கள், பாரிசவாதம், வகை இரண்டைச் சேர்ந்த நீரிழிவு என்பவற்றையும் 40 வீதத்துக்கு மேலாக புற்றுநோய்களையும் குறைக்க முடியும்.

**வாழ்க்கைப் பாணியைச் சீராக்குதல்**

எமது வாழ்க்கைப் பாணியை ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்றதாக வடிவமைத்துக் கொள்வதனால் பல தொற்றாத நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ள முடியும்.

**புகைப்பொருள் மதுசாரம் தவிர்த்தல்**

புகைத்தலால் புகைப்பவருக்கும் அருகில் இருப்பவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது எனத் தெரிந்தும் நம்மில் பலர் அதனைத் தவிர்ப்பதற்கு மனங் கொள்வதில்லை. காரணம் அவர்கள் அதற்கு நிரந்தர அடிமைகளாக மாறியுள்ளமையே ஆகும். புகைப்பொருள் பாவனையால் (சிகரெட், பீடி, சுருட்டு) புகையிலுள்ள நிகொட்டின், சயனைட், தார், கட்மியம் போன்ற பல நஞ்சுப் பொருள்க்ள் எமது சுவாசத் தொகுதியை மட்டுமன்றி உடலின் ஏனைய பகுதிகளுக்கும் குருதியினூடாகச் சென்று பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. மேலும் புகையிலுள்ள காபன் ஓர்ஒக்சைட் (Co)ஆனது இதயம், மூளை ஆகியவற்றுக்குச் செல்லும் ஒட்சிசனைக் குறைக்கின்றது. இதனால் மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், சுவாசப்பை புற்றுநோய், பாரிச வாதம், சிறுநீரகச் செயலிழப்பு போன்ற நோய் நிலைமைகள் தோன்றுகின்றன. மதுவின் பாவனையால் மூளையின் சமநிலை பாதிக்கப்படுவதோடு ஈரல் மற்றும் சிறுநீரகங்களிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றது. மேலும் மூளை பாதிப்படைந்து நினைவாற்றல் குறைவு, உயர் குருதி அமுக்கம், ஈரல் புற்றுநோய், இரைப்பைப் புற்றுநோய், கைகால் நடுக்கம், விதைகள் சுருங்குதல், ஆண்குறி விறைப்படைவதில் பாதிப்பு, சதையி அழற்சி, உளநல பாதிப்பு என்பன ஏற்படுவதற்கான சாத்தியங்களும் அதிகரிக்கின்றன.

**சுகாதாரமற்ற உணவுமுறை**

சுகாதாரமற்ற அல்லது போசாக்கற்ற உணவுகளை உள்ளெடுப்பதும் (சம பல உணவுகளைத் தவிர்த்தல்) தொற்றா நோய்கள் உருவாகும் காரணிகளில் ஒன்றாகிறது. முதலில் எமது உயரத்துக்கு ஏற்ற உடல் நிறையைப் பேணுவது மிக அவசியமானதாகும். எனவே ஒவ்வொருவரும் தனது உடற் திணிவுச் சுட்டி (Body Mass Index) யை தெரிந்து வைத்திருத்தல் அவசியமானதாகும்.

இந்தச் சமன்பாட்டினூடாகக் கணிக்கப்படும் BMI ஆனது வளர்ந்தோரில் 18.5 இலிலிருந்து 25 க்கு இடையில் இருத்தலே சிறந்தது. ஆசியாவில் இதன் வீச்சை18.5 இலிருந்து 23 வரை வரையறுத்துள்ளனர். இது 25 க்கு மேல் அதிகரிக்கும் போது தொற்றா நோய்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

மேலும் எமது இடுப்புச் சுற்றளவானது (இறுதி விலா எலும்புக்கும் இடுப்பு எலும்புக்கும் இடையே தொப்புள் பகுதியூடான நாரியின் சுற்றளவு) பெண்களில் 32 அங்குலத்துக்கு கூடாமலும், ஆண்களில் 35 அங்குலத்துக்கு கூடாமலும் இருப்பது சிறந்தது. இது அதிகரிக்குமாயின் உடலில் கொலஸ்ரோல் அதிகரிப்பதை அடையாளங் கண்டு கொள்ள முடியும். அதாவது மேலதிகமான சீனி, மாப்பொருள் கொழுப்பாக வயிற்றுத் தோலின் கீழாகப் படிவதே இதன் அதிகரிப்புக்கு காரணமாகும்.

எமது நாளாந்த உணவில் மரக்கறிகள் உள்ளெடுப்பதை அதிகரிக்க வேண்டும். மரக்கறிகளில் விற்றமின்கள், கனியுப்புக்கள், எதிர் ஒட்சியேற்றிகள் என்பன இருப்பதால் புற்றுநோய், கொலஸ்ரோல் மற்றும் இருதய நோய்கள் உருவாகும் வாய்ப்புகள் குறைவடைகின்றன. மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து குருதியில் குளுக்கோசு, கொலஸ்ரோல் அகத்துறிஞ்சுவதை குறைப்பதோடு மலச்சிக்கலையும் தடுக்கிறது.

மரக்கறிகளினூடாக எம்மை அடைகின்ற விவசாய இரசாயனங்களைக் குறைப்பதற்கு வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறும் மரக்கறிகளையும், ஏனையவற்றை நன்கு கழுவி தோல் நீக்கக் கூடியவற்றுக்கு தோலை நீக்கியும் சமைப்பது பாதுகாப்பானதாகும்.

நாம் உப்பு, சீனி, கொழுப்பு என்பவற்றை அதிகளவு உள்ளெடுக்கும்போது தொற்றா நோய்கள் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

இதைவிட உடலுக்குத் தேவையான போசனைப் பொருள்கள் பற்றாக்குறையான உணவுகளை உள்ளெடுக்கும்போது போசனைக் குறைபாட்டு நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக இரும்புச் சத்து குறைவாகும் போது குருதிச் சோகையும், போலிக்கமிலச் சத்து தாயில் குறைவடையும்போது பாதிக்கப்பட்ட குழந்தைப் பிறப்பு என்பன ஏற்படுகின்றன.

எனவே எமது உணவுப் பழக்கத்தை ஆரோக்கியமானதாக சமபல உணவாக மாற்றி அமைப்பதன் மூலம் உணவே மருந்தாகி தொற்றா நோய்கள் எம்மை அணுகாது விலகி விடுகின்றன.

**உடற் பயிற்சி**

உடற் பயிற்சியானது எமது உடலை சிறந்த கட்டமைப்போடு பேணவும், உடல் நிறை அதிகரிக்காது பாதுகாக்கவும், எலும்பு-தசை, இதயத்தின் உறுதிக்கும் வலுச் சேர்க்கிறது. மேலும் மனதுக்கு புத்துணர்ச்சியைத் தந்து மன அழுத்தத்தை குறைக்கவும் எப்போதுமே நாம் சுறுசுறுப்பாக இருக்கவும் உதவுகிறது. இதனால் உயர் குருதி அமுக்கம், உடல் எடை அதிகரிப்பு என்பன கட்டுப்படுத்தப்படுகின்றன.

இலகுவானதும் நாளாந்தம் செய்யக்கூடியதுமான உடற் பயிற்சிகளாக கைகளை வீசியவாறு வேகமாக நடத்தல், சைக்கிள் ஓட்டம், மாடிப் படிகளில் ஏறி இறங்குதல், நீச்சல் நடனமாடுதல், விளையாட்டு, யோகாசனம் போன்றவற்றையும் குறிப்பிடலாம். உடற் பயிற்சியானது தினமும் 30 நிமிடங்களாவது மேற்கொள்ளுதல் அதிக பலன்களைத் தரும். போதியளவு உடற்பயிற்சி செய்வதனால் உடலிலுள்ள மேலதிக கொழுப்பு எரிக்கப்படுவதோடு அவை உடலில் தேங்கு வது தடுக்கப்படும். மேலும் சீரான குருதிச் சுற்றோட்டம் ஏற்பட்டு ஒட்சியேற்றப்பட்ட குருதி எல்லா அங்கங்களுக்கும் கிடைக்க வழி ஏற்படுகின்றது.

**சூழல் மாசுபாடு**

நாளாந்தம் பல்வேறு மனித செயற்பாடுகளால் சூழல் மாசடைந்து வருகிறது. வளி, நீர், நிலம் அனைத்தும் மாசடைவதால் அதன் விரும்பத்தகாத விளைவுகள் எமது வாழ்க்கைக் கோலத்திலும் செல்வாக்குச் செலுத்தி தொற்றா நோய்களைத் தோற்றுவிக்கின்றது.

குறிப்பாக தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகை, தூசு போன்றவற்றால் வளி மாசடைந்து நீண்டகால சுவாசப்பை நோய்களையும், இரசாயனங்கள் நீருடனும், நிலத்துடனும் கலந்து அவை தாவர, விலங்கு உணவுகளூடாக உடலில் செறிவடைந்து நீண்டகால சிறுநீரக நோய்கள், உயர்குருதி அமுக்கம், இதய நோய்கள், புற்றுநோய்கள் ஆகியவற்றை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. இதைவிட சூரியனிலிருந்து வரும் கதிர்வீச்சுக்களும், மனித செயற்பாடுகளால் தொலைத்தொடர்பு கோபுரங்களூடாக வெளிவிடப்படும் காந்தப்புல செறிவுகளும் புற்றுநோய்களைத் தோற்றுவிக்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன. எனவே சூழல் மாசுபடுவதை தடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் சூழலுக்கு நேசமான வாழ்வு முறையைப் பெற்று பல தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

**மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல்**

ஒருவரது ஆரோக்கியத்திலே உள நல ஆரோக்கியமும் முக்கிய பங்கு வகிக்கிறது. உள நலம் பாதிக்கப்பட்டு நெருக்கீடுகள், மன அழுத்தங்கள் ஏற்படுவதால் தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. நாம் எமது உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு முதலில் நாளாந்த மன அழுத்தங்களிலிருந்து விடுபட வேண்டும். மன அழுத்தம் அதிகரிக்கும் போது தசைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவோடு உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள், நீரிழிவு என்பனவற்றுக்கான அபாயமும் அதிகரிக்கின்றது. எனவே நல்ல மனநிலையைப் பேண தியானம் செய்தல், மனதுக்கு இதமான இசையை இரசித்தல், உடற் பயிற்சிகள் விளையாட்டுக்களில் ஈடுபடல், கலைகளில் ஈடுபடல், குடும்பத்துடன் நேரம் செலவழித்தல், சமூக விடயங்களில் ஈடுபட்டு செயற்படல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கலாம்.

**ஆபத்துக் காரணிகளின் முன்னணி**

உலக சுகாதார நிறுவனம் 2002 ஆம் ஆண்டில் தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக் காரணிகளாக ஐந்து காரணிகளை முன்னிலைப்படுத்தியுள்ளது. அவையாவன . உயர் குருதியமுக்கம், உயர் கொலஸ்ரோல் மட்டம், புகைப்பொருள் பாவனை, மது அருந்து தல், அதிகரித்த உடல் எடை என்பவையாகும்.

பொதுவாக ஒருவரில் குருதியின் வெல்ல மட்டம் 100 மில்லிலீற்றருக்கு அதிகமாகவும் 125 மில்லிகிராமுக்கு குறைவாகவும், குருதி அமுக்கம் 130/80 mmHg க்கு அதிகரிக்காமலும் உடற் திணிவுச் சுட்டி 18.5 க்கும் 23 க்கும் இடையிலும் பேணப்படுமானால் தொற்றா நோய்கள் ஏற்படுவூதற்கான வாய்ப்புகள் மிக குறைவாகக் காணப்படும்.

**விழிப்புணர்வு தேவை**

எனவே எதிர்கால பெருஞ் சவாலாக உருவெடுத்துவரும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்த தொற்றா நோய்களைத் தோற்றுவிக்கும் அபாய காரணிகள் பற்றியும் அவற்றை வெற்றி கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.







(C 14568)

# விநோத உடைப் போட்டி

## முன்பள்ளிச் சிறார்களின்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகர சபையினர் சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் சிறார்களுக்கு இடையிலான விநோத உடைப்போட்டியை அண்மையில் நடத்தினர்.

உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டைச் சித்திரிக்கும் வகையில் விநோத உடைகள் அமைந்திருக்க வேண்டும் என்று அறிவிக்கப் பட்டிருந்ததால் ஒவ்வொரு முன்பள்ளியும் உள்ளூராட்சிசபைகளின் செயற்பாட்டை சித்திரிக்கும் வகையில் சிறார்களை தயார்ப்படுத்தியிருந்தனர்.



போட்டிகளில் சபை எல்லைக்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளும் சிறார்களை விநோத உடையில் அழைத்து வந்திருந்தனர். (வ-9)

# இலவசமாக நிகழ்வுகள் நடத்த அனுமதிக்குக

## வலி.தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில்

வலி.தென்மேற்கு, ஜூன் 29

முன்பள்ளி ஆசிரியர்கள் வருமானத்தை எதிர்பார்க்காமல் மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி குறிப்பிட்டளவு கொடுப்பனவுடன் சேவையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் மாணவர்களின் நிகழ்வுகளை நடத்துவதற்கு மண்டபத்துக்கான வாடகைப் பணத்தை வழங்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

எனவே, வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் சிறுவர் தினம், கலை விழா போன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு கலாசார மண்டபத்தை இலவசமாகத் தந்துதவுமாறுவலி.தென்மேற்குபிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கம் பிரதேச செயலரைக் கோரியுள்ளது. (வ-115)

**சிறுவர் தினம், கலை விழா போன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு கலாசார மண்ட பத்தை இலவசமாகத் தந்துதவு மாறு கோரியுள்ளனர்**



(C 14567)


# சோதனையில் சிக்கின பழுதடைந்த பொருள்கள்

## யாழ்.ஆஸ்பத்திரி வீதிக் கடைகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வியாபார நிலையங்களில் திடீரென மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் பெருமளவு பழுதடைந்த மற்றும் காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டதுடன் வர்த்தகர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. சுகாதார அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சிக்கிக் கொண்ட வர்த்தகர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டவர்கள் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் கடை ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டதுடன், ஏனைய வர்த்தகர்களுக்கு 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரையிலான அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது. (வ)

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தேவையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**
**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு. சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk



MEDICAL PLANS
பரிபூரணமான ஆரோக்கிய காப்புறுதி

அரசனாக இருந்தாலும் நோய் வந்தால்
அது பிரச்சினைதான்

முழு குடும்பத்தையும் பாதுகாக்கும் உங்களுக்கும் பாதுகாப்பு அவசியம்

செலிங்கோ லைஃப் மெடிக்கல் ப்ளேன்ஸ்

| 36 பாரதூரமான நோய்களுக்கு | மேலும் 526 அறுவை சிகிச்சைகளுக்கு | நாளாந்த கொடுப்பனவுகள் ரூ. 12,500/- வரை |
|---|---|---|

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் (011) 2 461 461

(C/14563)

செலிங்கோ லைஃப்






GOLD Fairness
Day & Night Cream

- சூரிய ஒளியிலிருந்து சருமத்தை பாதுகாக்கும். சருமம் பொலிவற்று போதல் மற்றும் பருக்களை கட்டுப்படுத்தும்.
- சருமத்தின் பொலிவுத்தன்மையை சரியான அளவில் பேணுகின்றது.
- Make-up செய்யும் போது Foundation பூச்சாகவும் உபயோகிக்கலாம்.
- சருமத்தின் சுவிப்பை பாதுகாப்பதோடு சருமத்தை மென்மையாக்கும்.

உங்களது பிரியமான 4rever மூலம்
பெறுமதி மிக்க பரிசில்களை
வெல்லுங்கள்
4rever பெட்டியின் மேற்புறப் பக்கத்தை
4rever.Skin Naturals, No.287/2,B,
Stanly Thilakaratna Mawatha,
Nugegoda என்ற முகவரிக்கு உங்கள்
விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

பெயர்:..................................
முகவரி:..................................
தொ.பே.இல:..................................
தே.அ.அட்டை இல:..................................

Chandhani Bandara
4REVER FOUNDER & PROPRIETOR
(Cosmetologist)

ISO 9001:2008 CERTIFIED COMPANY

011 440 3283

shopping online

(C/14563)




# யாழ். மருத்துவமனைகளுக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

## வை.எம்.சீ.ஏ. நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தினர் யாழ்.மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்க வென ஆறு சக்கர நாற்காலிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். நிறுவன மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிறுவன உப தலைவரும் நிவாரணக் குழுத் தலைவரு மான புத்திசிகாமணி, செயலாளர் எஸ்.ஜெயராஜ சிங்கம் ஆகியோர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் சக்கர நாற்காலிகள் ஆறையும் கையளித்தனர். இந்த நாற்காலிகள் யாழ்.மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)



# நூறு மில்லியன் திட்டப் பணிகள் வேலணையில் ஓரளவுக்குப் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 29

வேலணை பிரதேச சபைப் பகுதியில் நூறு மில்லியன் திட்டத்துக்கான அபிவிருத்தி வேலைகளில் கணிசமான பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

வீதி உவர் நிலத் தடுப்பு அணைகள் உட்பட 18 வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ். சிவராசா தெரிவித்தார்.

ஆயிரம் கோடி வேலைத்திட்டம் குறித்த அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல்கள் தமது பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் தவிசாளர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)






# வள்ளுவன் முன்பள்ளி படையினரால் புனரமைப்பு

வரணி, ஜீன் 29
கொடிகாமம் மந்துவில் வள்ளுவன் முன்பள்ளிக் கட்டடம் கடந்த வியாழக்கிழமை பாதுகாப்புத் தரப்பினரால் வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டதுடன் கட்டடக் கூரைகள் திருத்தம் செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டன.
அதேவேளை - முன்பள்ளி வளாகம் சுத்தப்படுத்தப்பட்டது. பாடசாலை மாணவர்கள் உட்பட பெற்றோருக்கு உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.
இதன்போது கப்டன் வீரசிங்க மாணவருக்கான பிளாஸ்ரிக் கதிரைகளை இந்த நிகழ்வில் வைத்து பாடசாலை ஆசிரியையிடம் கையளித்தார். (வ-122)



படையினரால் புனரமைக்கப்படும் முன்பள்ளி




# சாவகச்சேரி இந்துவில் ஆய்வுகூடம் விரைவில் திறப்பு



தென்மராட்சி, ஜீன் 29
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மஹிந்தோதய செயற்றிட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.
20 மில்லியன் ரூபா செலவில் 50 அடி X 30 அடி அளவைக் கொண்ட இரு மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளபோதிலும் அதற்குரிய உபகரணங்கள் இன்னமும் வழங்கப்படாமை மாணவர்களின் பயன்பாட்டுக்கு விடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# 13 கிராம அலுவலர்கள் புதிய நிலையங்களுக்கு நியமனம்

தென்மராட்சி, ஜீன் 29
தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுநிர்வாக உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சால் நியமிக்கப்பட்டு பயிற்சிகளை நிறைவு செய்த 13 கிராம அலுவலர்கள் புதிய நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டு கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.
அவர்களது விவரம் வருமாறு:-
கைதடி, நாவற்குழி - எம்.சோபிகா (மறவன் புலோ), பி.சுபாஷன் (கொடிகாமம் தெற்கு), ரி.வாகினி (உசன்), எஸ்.தர்மினி (கரம்பகம்), எஸ்.ஞானசேந்தன் (எழுதுமட்டுவாழ் தெற்கு), ஜீ.சர்மிளா (எழுதுமட்டுவாழ் வடக்கு), எம். பிரகாஸ் (மிருசுவில் தெற்கு), எஸ். அகல்யா, (மாசேரி), என். விஜிதா (இடைக்குறிச்சி), ஆர்.ஜெயசப்திரா (வரணி, இயற்றாலை), எஸ்.கஸ்தூரி (மந்துவில் கிழக்கு), ஏ.மயூரதி (மந்துவில் மேற்கு) எஸ். ஜெனிதா.
இதேவேளை- தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு 13 கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் இன்னமும் எட்டுப் பிரிவுகளுக்கு பதில் கிராம அலுவலர்களே பணிபுரிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. நாவற்குழி கிழக்கு, மட்டுவில் - நுணாவில், மட்டுவில் மத்தி, கச்சாய், கொடிகாமம் மத்தி, கெற்பேலி, வரணி வடக்கு, சாவகச்சேரி நகர் ஆகிய பிரிவுகளில் பதில் கிராம அலுவலர்கள் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)





வவுனியா .அண்ணாநகர் பரமேஸ்வர வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலை திறப்பு விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்கள் வரவேற்கப்பட்டபோது.... (ச-402)



வவுனியா அருணோதயா தேசிய பாடசாலையின் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்பட்டபோது... (ச-402)



வவுனியா, குருமன்காடு பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் திருந்நாவற்குளம் பொலிஸ் பிரிவு, சிவில் பாதுகாப்புக் குழு, கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கிராம மக்கள் இணைந்து திருநாவற்குளம் பொது நோக்கு மண்டப வீதியை மண் போட்டு நிரப்பும் சிரமதானப் பணிகள் இடம்பெற்றது. (ச-421)



கிளிநொச்சி, அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் இந்திய வீட்டுத் திட்டக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கரைச்சி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் [illegible]மல்ராஜ உட்பட [illegible]கோரிகளையும், மக்களையும் காணலாம். (ச-18)





வவுனியா. இறம்பைக்குளம் புனித அந்தோனியார் பாலர் பாடசாலையின் விளை யாட்டு விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா உட்பட பங்குத் தந்தையர்கள், அருட் சகோதரிகள் கலந்துகொண்டதுடன், மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு இடம்பெற்றதையும் காணலாம். (ச-421)



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் கணக்காளராக இருந்து கண்டி விவசாயத் திணைக்களத்தின் தலைமைப் பீடத்துக்கு கணக்காளராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் அ.ஜெயக்குமாருக்கு முல்லைத்தீவு மாவட்ட ஓய்வூதியர் சங்கம் பாராட்டு விழாவை நடத்தியபோது, கணக்காளர் அ.ஜெயக்குமார் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதைக் காணலாம். (ச-421)




முல்லைத்தீவு மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு கௌரவிப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் உறுப்பினர்கள் சிதம்பரப்பிள்ளை, லோகசவுந்தரலிங்கம் ஆகியோர் சிரேஷ்ட உறுப்பினர்களைக் கௌரவிப்பதைக் காணலாம். (ச-421)



வவுனியா சுத்தானந்தா பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இடம்பெற்றபோது மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு இடம்பெற்றபோது... (ச-421)

# யாழ். மாவட்டத்தில் டெங்கு தீவிரம்

## காய்ச்சல் வந்தால் வைத்திய ஆலோசனை பெறுங்கள்

இலங்கையின் தென் பகுதியிலுள்ள பல மாவட்டங்களில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வருகின்றது. குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்துக்குச் சென்று வந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இதற்கு மேலதிகமாக தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ளூரிலேயே பலர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஜூன் மாதத்தில் மட்டும் இது வரை யாழ்.மாவட்டத்தில் 85 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டுள்ளார்கள். யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதை தற்போது அவதானிக்கக் கூடியதாக்வுள்ளது.

டெங்கு நோய்ப் பரம்பலை சுகாதாரத் திணைக்களத்தினால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் என அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பும் அவசியம். எனவே, உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுத்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

★ சகல அரச, தனியார் நிறுவனங்களின் சுற்றுச் சூழல் பணியாளர்களால் முழுமையாக சிரமதான அடிப்படையில் துப்புரவுசெய்யப்பட வேண்டும்.

★ பாடசாலைகள் மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளவும், சுற்றாடலும் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

★ வர்த்தக நிலையங்கள் அவற்றின் உரிமையாளர்களால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

★ வைத்தியசாலைகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

★ தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

★ வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட அறங்காவலர் சபையின் ஏற்பாட்டின் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

★ தனியார் வீடுகள் உரிமையாளர்களால்/குடியிருப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

★ பராமரிப்பற்ற வீடுகள், காணிகள் உரிமையாளர்களால்/பராமரிப்பாளர்களால் துப்புரவுசெய்யப்பட வேண்டும்.

★ பொதுச் சந்தைகள், மயானங்கள் போன்ற பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

★ கழிவு நீர் வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களினாலும் உள்ளூராட்சி மன்றங்களினாலும் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

★ பிரதேச மட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் பிரதேச செயலாளர், பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டத்தை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**காய்ச்சலா? கவனம்; ஓய்வு மிக முக்கியம்**

தற்போது யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவிவரும் நிலையில் காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றவும்.

தற்போதைய சூழ்நிலையில் காய்ச்சல் ஏற்படும்போது அது டெங்குக் காய்ச்சலாக இருக்கலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பூரண ஓய்வில் இருக்க வேண்டும். வேலைக்குச் செல்பவர்களும், மாணவர்களும் விடுமுறை பெற்று வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும்.

வீட்டிலும் கடுமையான வேலையேதும் செய்யாது பூரண ஓய்வில் இருக்க வேண்டும்.

பொதுவாக டெங்குக் காய்ச்சலின் பின் விளைவுகள், இறப்புக்கள், காய்ச்சல் தணிந்த பின்னரே ஏற்படுவது வழமை. எனவே காய்ச்சல் தணிந்த பின்னரும் இரண்டு நாள்களுக்கு ஓய்வு அவசியம்.

மாணவர்கள் காய்ச்சல் ஏற்படும் காலத்தில், விளையாட்டுக்களில் பங்குபற்றுவதைத் தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் டெங்குக் காய்ச்சலுடன் பரசிற்றமோல் வில்லைகளைபோட்டுக்கொண்டுவிளையாட்டுக்களில் பங்குபற்றிய இரண்டு மாணவர்கள் அநியாயமாக உயிரிழந்ததைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

காய்ச்சலின்போது போதிய நீராகாரங்களை அருந்தி உடலின் நீர்த்தன்மை வற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சில நோயாளர்கள் பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு அதிகமாகப் பாவித்து சுய வைத்தியம் செய்வதை அவதானிக்க முடிகிறது. இதனால் ஈரல் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் சரியான வைத்திய ஆலோசனையின்படி பரசிற்றமோல் வில்லைகளைப் பாவிக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு இது மிக மிக அவசியம்.

மேலும் காய்ச்சலுடன் மயக்கம், வயிற்றுவலி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் காலம் தாழ்த்தாது உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும்.

எனவே யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து எமது பங்களிப்பை வழங்குவோம்.

மருத்துவர்
ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய சுகாதார
சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# ஜெனிவா கூட்டத் தொடர் நிறைவு; இம்முறை 48 பிரேரணைகள் தாக்கல்

## செப்ரெம்பர் மாத அமர்வில் இலங்கை குறித்து வாய்மூல அறிக்கை

கொழும்பு, ஜூன் 29

ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 26ஆவது கூட்டத் தொடர் நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்துள்ளது.

சபையின் 26ஆவது கூட்டத் தொடர் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமானது. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் மனித உரிமைகள் சபையின் இந்த முறைக் கூட்டத் தொடரில் 48 பிரேரணைகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் பொதுவான மனித உரிமை விவகாரங்கள் குறித்தே இந்தப் பிரேரணைகள் உறுப்பு நாடுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரை இந்த முறை கூட்டத் தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜெனிவா மனித உரிமைகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான அதிகாரிகள் மட்டக் குழுவினர் கலந்துகொண்டனர். அத்துடன் ரவிநாத் ஆரியசிங்க கூட்டத்தில் உரையாற்றி யிருந்தார்.

அதேவேளை .இந்த முறை கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள்சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான பரந்துபட்ட விசா ரணையை மேற்கொள்வதற்கான நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள் உள்ளடங்கிய விசாரணைக் குழுவை நியமித்துள்ளதாகக் குறிப்பிட்டார். இடம்பெற்று முடிந்த இந்தக் கூட்டத் தொடரே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவ நீதம்பிள்ளை ஆணையாளராகக் கலந்துகொள்ளும் இறு திக் கூட்டத் தொடராகும். அவர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் அப் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்குப் பதிலாக ஜோர் தான் நாட்டுக்கான ஐ.நாவின் நிரந்தரத் தூதர் செயித் அல் ஹுசைன் புதிய ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சயித் அல் ஹுசைன், ஜான்ஸ்ஷாப்கன்ஸ் பல்கலைக் கழகத்தில் பயின்றவர். கேம் பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்.

**சலோகா பெயானியின் அறிக்கை**

இந்த முறை கூட்டத் தொடரின் போது ஐக்கிய நாடுகளின் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் சலோகா பெயானியும் தனது அறிக்கையை வெளியிட்டார். கடந்த டிசெம்பர் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அவர் இலங்கையின் மீள்குடியேற்றம் குறித்த விசேட அறிக்கை ஒன்றை இந்த முறை மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடருக்குக் கையளித்திருந்தார். அத்துடன் கடந்த 12ஆம் திகதி அமர்வின்போதும் அவர் உரையாற்றியிருந்தார்.

அதில் இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நிலையில் இருக்கின்ற மக்களின் நிலை குறித்தும் வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் ஆபத்தான சூழலில் வாழ்கின்ற மக்கள் குறித்தும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்து வதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையின்27ஆவதுகூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளதுடன் அதில் இலங்கை குறித்து விசாரணை செய்ய நியமிக் கப்பட்டுள்ள விசாரணைக்குழு தனது வாய்மூல அறிக் கையை வெளி யிடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி பொலிஸாருக்கு வர்த்தகர்கள் பாராட்டு

தென்மராட்சி, ஜூன் 29

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தைக் கண்டுபிடித்து பொருள்களை மீட்டமைக்காகச் சாவகச்சேரிபொலிஸாருக்கு சாவகச்சேரி நகரப் பகுதி வர்த் தகர்கள் பாராட்டுத் தெரிவித் துள்ளனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள மல்ரி சென்ரர் வர்த்தக நிலையத்தில் கடந்த ஜூன் முதலாம் திகதி இரவு கூரைத் தகட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்து சுமார் 35 லட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசிகள், இலத்திரனியல் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக கடந்த புதன்கிழமை கொடிகாமம் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து திருட்டுப்போன பொருள்களின் ஒரு பகுதியை மீட்டுவர்த்தகநிலைய உரிமையாளரால் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இது தொடர்பாக ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் தொடர் நடவடிக்கையின் பயனாகப் பொருள்கள் மீட்கப்பட்டமை தமக்கு பெரும் நம்பிக்கையை ஊட்டியுள்ளதாகத் தெரிவித்த வர்த்தகர்கள் பொலிஸாருக்குப் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையத் திருட்டுத் தொடர்பாகப் பொலிஸாரால் ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் , திருட்டுப்போன பொருள்களின் ஒரு பகுதி மீட்கப்பட்டதுடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-9)

# கர்ப்பிணிகளுக்கான பராமரிப்பு உணவு குறித்த விழிப்புணர்வு

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் உள்ள கர்ப்பிணிகளுக்கு கர்ப்ப காலம் மற்றும் பிரசவத்துக்கு முன்னரும், பிரசவத்துக்குப் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு உணவு வகைகள் தொடர்பான விழிப்புணர்வு அறிவூட்டல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தர்மபுரம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.



*விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டோர்....*

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.சுவேந்திரன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இ.செந் தூரன், கண்டாவளை பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர். (வ-9)

# போதையில் குழப்பம்; இருவருக்கு 80 மணி நேர சமூகப் பணிக்கு உத்தரவு

தென்மராட்சி, ஜூன் 29

மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியில் இவ்விதம் குழப்பம் விளைவித்த இந்த இருவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவின் ஊடாக ஆறு மாத காலத்தினுள் 80 மணி நேரம் சமூகப் பணியில் ஈடு படுமாறு உத்தரவிட்டார்.

(ஓ-9)

# பனை விழுந்து வீடு சேதம்

ஒட்டுசுட்டான், ஜூன் 29

கற்சிலைமடுப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பனை மரமொன்று முறிந்து விழுந்ததில் வீடு ஒன்று சேதமடைந்துள்ளது.

வீட்டு உரிமையாளர் இரவு வேலைக்குச் சென்றிருந்தார். அவரது மனைவி வீட்டு விறாந்தையில் உறங்கிக் கொண்டிருந்தார். அப்போது பனை மரம் முறிந்து வீட்டுக் கூரையின் மேல் விழுந்துள்ளது. இதன் போது வீட்டுக்கும் தளபாடங்களுக்கும் கடும் சேதம் ஏற்பட்டபோதும் தெய்வாதீனமாக வேறு விபரீதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-500)

# சுன்னாகம் லயன்ஸ் கழக பதவியேற்பு வாழ்வகத்தில்

சுன்னாகம், ஜூன் 29

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டுக்குரிய புதிய பணிப்பாளர் சபை பதவியேற்பு சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 03 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகங்களின் 2 ஆவது மாவட்டத் தலைவர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, லயன் சீமாட்டி ரஞ்சி தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். புதிய சபையின் பதவியேற்பில் தலைவராக மானிப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் லயன் பொன். பாலகுமாரும் செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரனும், பொருளாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேலும் முதலாவது உப தலைவராக ஹெல்தி லங்கா நிறுவனத்தின் மாகாண இணைப்பாளர் லயன் ஆர்.சிவநாயகமும், இரண்டாவது உப தலைவராக சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத் தலைவர் லயன் சி.குமரவேலும், மூன்றாவது உப தலைவராக மக்கள் வங்கி உத்தியோகத்தர் லயன் என்.தயாரூபனும் அங்கத்துவ இணைப்பாளராக ஓய்வு நிலை பிரதேச செயலரும், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன்.த.தேவராஜனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் லயன் த.சித்தார்த்தன், ஓய்வு நிலை சமூக சேவை உத்தியோகத்தர் லயன் வை. யோகானந்தராஜா, வைத்திய கலாநிதி லயன் எஸ்.பேரின்பநாயகம், சமாதான நீதிவான் லயன் செ.மகாதேவா, லயன் சீமாட்டி ம.பூமாதேவி, சட்டத்தரணி எஸ்.பி.சிவஞானம், சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம், தீவகம் பிரதேச சபை முகாமை உதவியாளர் லயன் எல்.ஜூட்சி ஆகியோரும் பதவியேற்கவுள்ளனர். (ஒ)

## விற்பனை பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்துக்கு Air Conditioning விற்பனை செய்வதற்குரிய விற்பனை பிரதிநிதி தேவை. மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். அனுபவம் உடையவர் களுக்கு முன்னுரிமை.

**Cool Kingdom Engineering**
**84A, Rasavinthoddam, Jaffna.**
(49440) (10) **T.P: 077 987 7309, 077 1710 268**

## ஆதனம் கடைக்கட்டடங்களுடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பெரியகடை J/80 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஸ்ரான்லி றோட்டில் நிலப்பரப்பு 4 (நான்கு) குளி 9.95 (ஒன்பது தசம் ஒன்பது ஐந்து) விஸ்தீரணம் உடைய ஆதனம் இரண்டு கடைக்கட்டடங்களுடன் விற்பனைக்குண்டு.

(F/14830) (10) **தொடர்பு: 077 395 0052**

## வெல்லுங்கள் 7,500/= பெறுமதியான வவுச்சர்களை

பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் எது?

A) பரீஸ் B) கலிபோனியா C) டோரன்டோ D) கோலாலம்பூர்

சரியான விடையை
< விடை >, < பெயர் >, <NIC No>
என்ற வடிவில் 0775748095 என்ற இலக்கத்திற்கு SMS அனுப்பவும் சரியான விடையை அனுப்பும் 20 அதிஷ்டசாலிகளுக்கு Banking, Chartered, AAT, Spoken English கற்பதற்கான 1500/= பெறுமதியான 5 வவுச்சர்கள் வழங்கப்படும்.
(நிபந்தனைக்குட்பட்டது)

spectra skills
19 Stanley Road
(Peoples Bank 2nd floor) Jaffna
Tel: 212221422
212221423
(49429)

## கேள்வி கோரல்

**அல்வாய் மாலுசந்தை வரதராஜ விநாயகர் தேவஸ்தானத்தில் பஞ்சதள ராஜகோபுரம் அமைப்பதற்கு திருவருள் கூடியுள்ளது.**

**இதற்காக தகுதியானவர்களிடமிருந்து வரைபடம் மற்றும் கூறுவிலை கோரப்பட்டுள்ளது. எதிர்வரும் 16.07.2014 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் பார்வையிட்டு சமர்ப்பிக்கவும்.**

ராஜகோபுரம், திருப்பணிச்சபையினர்,
வரதராஜ விநாயகர் தேவஸ்தானம்.
(45888) (4.3.8.)

## விநியோகஸ்தர்கள் தேவை

Russel's

நாடளாவிய ரீதியில் 25 வருடகாலமாக தேயிலை விற்பனைத் துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் தனது சேவையை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஸ்தரிக்கின்றது.

வடபகுதிக்கு விநியோகஸ்தர்களாக இணைய விரும்புவோர் உடனே தொடர்பு கொள்ளவும்

எதிர்பார்க்கப்படும் நகரங்கள் யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, சாவகச்சேரி, கொடிகாமம்.

உடனே தொடர்புகொள்ளுங்கள்
072 690 5453, 0112 688067. Fax: 0112 686 058

**Russele Group of Companies**
820/1, Maradana Rd, Colombo-10.




(10.6.3)

## வேலையாள்கள் தேவை

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் சிறுகைத் தொழில் நிறுவனத்துக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (49432) (45.6.3) விபரங்களுக்கு: 077 418 0185

## மணமகள் தேவை

சைவபோசனம் யாழ்.இந்து, மகம், சிங்கராசி, 77 இல் பிறந்தவருக்கு சைவபோசன மணமகள் தேவை. 02, 11, 20, 29 திகதிகளில் பிறந்தவர்களுக்கு முன்னுரிமை. சீதனம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 711 1094 (சி/14577) (4.3.6.)

## EDU CONSULTANCY INTERNATIONAL

UK, NEW ZEALAND, AMERICA மற்றும் EUROPE ஆகிய நாடுகளுக்கு Visit Visa, Migration Visa சேவை வழங்கப்படும்.

Minimum Qualification for Student Visa,
- O/L
- IELTS (4.5 Band)



மேலதிக விபரங்களுக்கு கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

பிரகாஷ் (LLB)
Tel: - 0776 493 164, 077 3030391

FLEX Graphic

## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm




Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## வீடு வாடகைக்குண்டு

யாழ். மாநகர சபைக்குட்பட்ட மானிப்பாய் பிரதான வீதியில் சகல வசதியுடன் கூடிய இரு வீடுகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 873 3063, 077 025 0339 (49430) (4.3.6.)

## பதவி வெற்றிடம்

★ **உதவி முகாமையாளர்**

ஆண், பெண் வயதெல்லை கிடையாது. பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் முன்னுரிமை ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவர்கள், கடிதம் எழுதக் கூடியவர்கள் மாத்திரம் வரவும். கொழும்புக்கு அடிக்கடி சென்று வரக்கூடியவர்கள் மட்டுமே சேர்க்கப்படுவர். கவர்ச்சியான வேதனம். 2 வருடம் ஆகக்குறைந்தது சேவையாற்ற வேண் டும்.

**நேர்முகத் தேர்வு: 30.06.2014 பிற்பகல் 4.00 மணி**

**பிரதம நிறைவேற்று அதிகாரி**
**திசைகாட்டி (பிறை) லிமிற்**
**175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.** (49434) (10.6)



## தென்னந் தோட்டம் விற்பனைக்கு

தென்மராட்சிப் பகுதியில் 4 ஏக்கர் கட்டுக் கிணற்றுடன் கூடிய குழாய்நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட மின்சார வசதியுள்ள கால்நடைப் பண்ணைகள் அமைக்கக்கூடிய சுற்றுச்சூழல் உள்ளதும் 5000 கோழிகளுக்கு மேல் வளர்க்கக் கூடிய இடவசதி கொண்டதுமான 250 பயன்தரு தென்னைகளுக்கு மேல் உள்ளதும் மாதாந்த வருமானம் பெறக்கூடியதுமான தென்னந் தோட்டம் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 331 9945, 078 896 7168** (43873) (4.3.6.)

## தேவை

**உதவி முகாமையாளர் - களஞ்சிய காப்பாளர்**

யாழ்ப்பாணத்தில் A தரத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றுக்கு உதவி முகாமையாளர் மற்றும் களஞ்சிய காப்பாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரங்களை இரண்டு உறவினரல்லாத நபரின் பெயரை குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**மனிதவள பகுதி,**
(49441) (10) **31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

## விநியோகப் பிரதிநிதி தேவை

யாழ். மாவட்டத்தில் உள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையங்களுக்கு கைத்தொலைபேசிகளை விநியோகம் செய்வதற்கு 20-25 வயதுக்குட்பட்ட ஒருவர் தேவை.

**மேலதிக தொடர்புகளுக்கு நேரில் வரவும்**

**காலம் :** 30.06.2014 திங்கட்கிழமை
மு.ப. 10 மணி - 12 மணி

**அம்பிகை களஞ்சியம்**
(49437) (10) 306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள்சேவை

# திருமுருகன் கொம்நெற்

இல. 271A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835, 0777 554 528

- 11kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள்
- CD, DVD என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

கனடா, லண்டன், இந்தியா Online விஸா விண்ணப்பங்களினையும் பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நாடுகளிற்கான விஸா விண்ணப்பங்களினையும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பொறுப்பேற்க்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். உங்கள் உறவுகளிடம் 3 – 5 வேலைநாட்களில்

TCN Express
2b Nelsan Place,
Colombo - 6.

20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனிஇடம் பிடித்துள்ளது.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

**TOTAL OFFICE SOLUTIONS**
36/1D, Painters Road, Cavatkaddu, Mannar.
(C/14829)

# ஆடிப்பிறப்பை முன்னிட்டு வவுனியாவில் போட்டிகள்

வவுனியா, ஜீன் 29

தமிழர் பண்டிகைகளில் ஒன்றான ஆடிப்பிறப்பை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக மேற்படி போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று வவுனியா பிர தேச செயலாளர் கா.உதயராஜா அறிவித்துள்ளார்.

தரம் 6 முதல் 8 வரையான வகுப்பு மாணவர்கள் மத்தியில் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடசாலை பண்ணுடன் பாடும்போட்டியும்-


தரம் 9 முதல் 11 வரையான வகுப்பு மாணவர்கள் மத்தியில் "சோமசுந்தரப்புலவரும் ஆடிப்பிறப்பும்" என்ற தலைப்பில் (5 நிமிடம்) பேச்சுப் போட்டியும்-

தரம் 12 முதல் 13 வரையான வகுப்பு மாணவர்கள் மத்தியில் "சோமசுந்தரப் புலவர் ஒரு தமிழ்ப்பண்பாட்டுப் புலவர்" என்ற தலைப்பிலான (300 சொற்கள்) கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த போட்டிகள் நடத்தப்படும் என்றும், வெற்றி பெறும் மாணவர்களுக்கு புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் பிரதேச செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (ஒ-402)

# மாணவருக்கு வீதி சமிக்ஞைகள் தொடர்பில் விழிப்புணர்வு நாடகம்

## மன்னார் சித்தி விநாயகர் பாடசாலையில்



விழிப்புணர்வு நாடகத்தின் ஒரு காட்சி.

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மன்னார் பொலிஸ் நிலையத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் வீதி விபத்துக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

பொலிஸ் தலைமையக திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவு ஏற்பாடு செய்த குறித்த விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் பொலிஸ் நிலையத்தின் அனுசரணையில் இடம்பெற்றது.

மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வியாழக்கிழமை காலை விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. இதன் போது பாடசாலை மாணவர்கள் வீதியில் பயணிப்பது, சைக்கிளில் பயணிப்பது தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சித்தி விநாயகர் தேசிய பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் வீதி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரினால் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மோட்டார் சைக்கிள், சைக்கிள், ஓட்டோக்கள் மற்றும் இதர வாகனங்களில் பயணிக்கும் போது மக்கள் சரியான முறையில் வீதிச் சமிக்ஞைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பிலும் அதனால் ஏற்படும் நன்மை, தீமைகள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வாக காண்பிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்கள், மாணவத் தலைவர்கள், சாரணர்கள் என பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-56)

**காணி விற்பனைக்கு**

இளவாலை, சேந்தாங்குளம் சந்திக்கு அருகில் 35 பரப்பு 12 ¾ குழி கிணறு, பனை மற்றும் தென்னைகள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

(49359) (10) தொடர்பு: 071 801 5326

**வீடு வாடகைக்கு**

யாழ். இந்துக் கல்லூரி அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(49442) (10) தொடர்பு: 077 8336 848

**காணி விற்பனைக்கு**

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் முதலாம் குறுக்கு தெருவில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நேரடி விற்பனை மட்டும்)

தொடர்பு: 0777 037 058

(49359) (பி.ப. 2 மணிக்குப் பின்னர்)

**அறைகள் வாடகைக்கு**

யாழ். பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் மூன்று அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவர்கள்/ உத்தியோகத்தர்கள் (ஆண்கள்) விரும்பத்தக்கது.

(49436) (10) தொடர்பு: 071 856 5662

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் துரைராசா



உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் துரைராசா 28.06.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், வியாளாச்சியின் பாசமிகு கணவரும், செல்வரத்தினத்தின் உடன் பிறந்த சகோதரனும், கர்னராசா (பிரான்ஸ்) புஸ்பராசா (ஜேர்மனி) ஜீவராசா (கொலன்ட்) கருணவதி, சாந்தி சற்குணராசா (குணா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மலர், சரஸ்வதி, ராசதுரை, தனா, வரதராசா, மயூரி ஆகியோரின் மாமனும், சஜிவன், கீர்த்திகா, கிரிசாந், விதுசன், டெனிஸ்ஷன், விதுசியா, கீர்த்தனா, தனுஷன், சுஜி வன், கிஷானா, சயூ ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(49445)(10)

# அந்தியேட்டி அழைப்பு



## அமரர் அமிர்தலிங்க ஐயர் சண்முகப்பிரியா

கடந்த விஜய வருடம் தை மாதம் 19ஆம் வாரம் (01.02.2014) சனிக்கிழமை காலமாகிய அமரர் அமிர்தலிங்க ஐயர் சண்முகப்பிரியா அவர்களுக்கு, ஜயவருடம் ஆனி மாதம் 15ஆம் வாரம் ஞாயிற்றுக்கிழமை இன்று (29.06.2014) காலை 6.00 மணியளவில் பாஷண உற்வாசனமும், அதனைத் தொடர்ந்து சபிண்டீகரணமும் நடைபெறவிருப்பதால் இந் நிகழ்வில் தாங்கள், தங்கள் குடும்பத்தினருடன் பங்குகொண்டு, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

அம்மன் கோயிலடி,
கெருடாவில்.

குடும்பத்தினர்,

(45587)(10)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 01.03.1938

இறைவன் அடியில் 30.05.2014

## அமரர் பரசுராமன் சிவபாதசுந்தரம்

*நாள்கள் சில கடந்த போதிலும்*
*ஆறாது உங்கள் பிரிவு எம்மனதில்*
*ஆண்டவன் பாதத்தில் அமைதி கொள்க!*

கடந்த 30-05-2014 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி அறிந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல்கள் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (29-06-2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

திருமதி சி. இராஜபூபதி
(ராணி ரீச்சர்) மற்றும்
குடும்பத்தினர்.

(C/14831)(10)

# இலங்கைக்கான பயணத்தை நிறுத்தக் கூடாது பாப்பரசர்

## எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 29

பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் இலங்கைக்கு கட்டாயம் பயணம் செய்யவேண்டும் என்றும், அந்தப் பயணத்தை ஒரு போதும் நிறுத்தக் கூடாது என்றும் நோர்வேயின் முன்னாள் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

பாப்பாண்டவர் இலங்கைப் பயணத்தை நிறுத்தவேண்டுமெனச் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கோரி வருகின்றன. எனினும், பாப்பாண்டவர் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்வதே தமிழ் மக்களுக்கு நன்மை ஏற்படுத்தும் என சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்றபொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டைப் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பயன்படுத்திக் கொண்டதைப் போன்று, பாப்பாண்டவரும் இலங்கையை பயணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை பயணத்தை நிறுத்துவதன் மூலம் நன்மைகள் ஏற்படப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே ரிக் சொல்ஹெய்ம் இதனைத் தெரிவித்துள்ளார்.

போப்பாண்டாவர் இலங்கைக்கு பயணம் செய்வது சரியா, தவறா என டுவிட்டரில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. எனினும், இலங்கைக்கு பாப் பாண்டவர் பயணம் செய்து நேரடியாக தமது கருத்துக்களைவெளியிடுவதுவலுவானதாக அமையும் என சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழக மீனவர்கள் 22 பேரும் மண்டபத்தை சென்றடைந்தனர்



விடுவிக்கப்பட்ட மீனவர்கள்

இராமேஸ்வரம், ஜூன் 29


இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 22 பேரும் கடந்த புதன்கிழமை இரவு இராமேஸ்வரம், மண்டபத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்தில் இருந்து கடந்த 18ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற வேளை 5 விசைப்படகுகளுடன் 22 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீது எல்லை தாண்டி வந்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மன்னார் நீதிமன்றில் இவர்கள் முற்படுதத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய இவர்கள் 22 பேரும் கடந்த 25 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டு இந்தியத் துணைத்தூதர அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்படையினரின் உதவியுடன் இவர்கள் அனைவரும் அன்றிரவு அழைத்துச்செல்லப்பட்டு இந்தியக் கடலோரக் காவற் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஜ-14)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீசெல்ஸ் நாட்டின் ஜனாதிபதி ஜேம்ஸ் மிஷேசலை அவரது இல்லத்தில் நேற்று சனிக்கிழமை சந்தித்தார். தொடர்ந்து இலங்கைத் தூதரகத்தை ஜனாதிபதி அங்கு திறந்து வைத்தார். (த)

# இணையத்தளம் ஊடாக சிறுவர் துஷ்பிரயோகம்

## 6 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூன் 29

இணையத்தளங்களின் வாயிலாக சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவர்களில் இதுவரை 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் அரச உத்தியோகத்தர்களும் சில நிபுணர்களும் உள்ளடங்கவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அநோமா திஸாநாயக்க தலைமையின் கீழ் இயங்கும் மேற்படி அமைப்பின் புலனாய்வுப் பிரிவினரே இவ்வாறு 6 பேரைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதுவரை 2000 பேர், இணையத்தளங்களின் மூலமாகச் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு முயற்சித்துள்ளனர்.

இணையத்தளங்கள் ஊடாக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காகக் கடந்த ஜனவரி மாதம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணையத்தள புலனாய்வுப் பிரிவு மறுசீரமைக்கப்பட்டது.

இந்நிலையில், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அறியவரும்போது 24 மணி நேரமும் செயற்பாட்டில் இருக்கும் இவ்வமைப்பின் 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு அறிவிக்க முடியும்.

இந்தச் சம்பவங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும்.

இணையத்தளங்களின் வாயிலாகச் சிறுவர் துஷ்பிர யோகங்களில் ஈடுபடுபவர்கள் தந்திரமிக்கவர்களாகக் காணப்படுவதால் சிறுவர்களும் இது குறித்து நிதானத்துடன் செயற்படவேண்டும்' என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (த)

# யாழ். கல்வி வலயங்களுக்குள்ளேயே ஆசிரியர்களைப் பங்கிடமுடியா நிலை

## குற்றம் சாட்டுகிறார் சந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களுக்குள்ளேயே ஆசிரியர் வளத்தைச் சரியான முறையில் பங்கீடு செய்ய முடியாதளவிற்கு வட மாகாண கல்விநிர்வாகம் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் மகிந்தோதய தொழிநுட்ப ஆய்வு கூடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

தனியே பௌதிக வளம் மட்டும் கல்வியை வளர்த்துவிடப் போது மானது அல்ல. ஏனைய எல்லா வளங்களையும் ஒருங்கிணைப்பது முக்கியமானது. அவற்றுள் பெரும் குறைபாடுகள் நிலவுகின்றது. குறிப்பாக ஆசிரியர் வளத்தை ஒரே மாவட்டத்துக்குள்ளேயே பங்கீடு செய்வதில் குழப்பங்கள் காணப்படுகின்றன. இது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பாக உள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஆசிரியர் வள பற்றாக்குறை நிலவுவது வழமையானது. ஏனெனில், அங்கு நீண்ட காலமாக இந்தப் பிரச்சினை நிலவுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் அப்படியில்லை. ஆசிரியர்களைப் பங்கிட்டுக்கொள்ளக்கூடிய நிலைமை காணப்படுகிறது. அப்படியிருந்தும் இங்கு ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்ற குற்றச்சாட்டை ஏற்கமுடியாது. அதற்குக் காரணம் வடமாகாண கல்வி நிர்வாகமே - என்றார். (ஐ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கு

இலங்கையில் மீண்டுமொரு முறை பயங்கரவாதத்தை உருவாக்க இந்த அமைப்புகள் முயற்சித்துக்கொண்டே இருக்கின்றன.

வடக்கிலேயே இன்று அச்சுறுத்தலான சூழல் உள்ளது. சர்வதேச செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வடக்கில் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டும் என்றார் ருவான் வணிகசூரிய. (த-5)

### ஆணையாளர்

காலத்தை மத்திய உள்ளூராட்சி அமைச்சு ஒரு வருடத்துக்கு நீடித்திருந்தது. இதற்கமைய நீடித்த ஆட்சிக் காலமும் எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை தற்போதுள்ளவாறு நடத்தாமல் தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ முறை மூலம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் சட்டவரைவாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வடக்கில் தொகுதி வாரியான பிரிப்பு நடவடிக்கைகள் இன்னமும் இடம்பெற்று முடியவில்லை. இதன் காரணமாக வவுனியா நகரசபை மற்றும் யாழ்.மாநகர சபை என்பவற்றின் நீடித்த பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்தாலும் தேர்தல் நடத்த முடியாத நிலைமை இருப்பதாகத் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பதவிக் காலத்தை ஒரு வருட காலத்துக்கு மேல் நீடிக்க முடியாத நிலைமையும் இருக்கின்றது என்று அதிகாரிகள் மேலும் கூறினர். இதனால் யாழ்.மாநகர சபை எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதிக்குப் பின்னர் ஆணையாளர் தலைமையிலேயே இயங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டு ஜூலை 23 ஆம் திகதியுடன் வடக்கிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களதும் ஆட்சி முடிவடைகின்றது. அதன் பின்னர் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரேயடியாக தேர்தலை நடத்த அரச தலைமை திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### 50 இந்திய

யினாலேயே மக்கள் குடியேறவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து யாழ்.மாவட்ட செயலகத்தினால் குறித்த வீடுகளின் பயனாளிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அதற்கமைய தற்போது 130 இற்கு மேற்பட்ட வீடுகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எஞ்சிய வீடுகளிலும் மக்களைக் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

### சாட்சிகளை

துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

முஸ்லிம்கள் மீதான வன்முறை ஐ.நாவின் கவனத்தை மூன்று நாள்களில் ஈர்த்திருந்தது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் தமிழர்கள் தான். இந்த நாட்டின் தமிழருடைய பிரச்சினை சர்வதேச சமூகத்தில் ஒலித்துக் கொண்டிருந்தபடியால்தான் முஸ்லிம்களின் பிரச்சினையும் சர்வதேச சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. எனவே, தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை தொடர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் 'உதயனு'க்கு அவர் வழாங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(அவரின் செவ்வியின் முழு விவரத்தை 5ஆம் பக்கத்தில் பார்க்கவும்.) (த)

## மரண அறிவித்தல்

### தம்பையா சண்முகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) 26.06.2014 சிவபதம் அடைந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சீனிவாசகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தாம்பிகையின் அன்புக் கணவரும், பிரபாகரன் (UK)பிரதீபன் (நோர்வே), காலஞ்சென்ற ஜெயதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோனிக்கா, ஜனனி ஆகியோரின் மாமனாரும், நிக்கோலஸ், தஷானி, தஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற நடராஜா (இளைப்பாறிய ஆசிரியர்), நாகராசா (இளைப்பாறிய ஆசிரியர், கனடா), சிவபுஸ்பம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, கமலாதேவி மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இணுவில் மேற்கு, இணுவில். (49382) (12.3.6) தகவல்: குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### செல்லம்மா கணபதிப்பிள்ளை

தாயின் மடியில்
13.12.1936

தெய்வத்தின் பாதத்தில்
29.06.2003

எம்மைப் பெற்றெடுத்த பெருந்தெய்வமே! எம் அம்மாவே!
பதினொரு ஆண்டுகள் மறைந்தாலும் தங்கள் பிரிவுத்துயர்
மறையவில்லை எம் அம்மாவே! தெய்வமான தெய்வமே!
என்றும் மறவோம் மாதாவே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (49425)(4.3.6) பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### நல்லம்மா பொன்னம்பலம்

| மண்ணில் | திதி: ஆனி | விண்ணில் |
|---|---|---|
| 02★01★1937 | பூர்வபக்க துதியை | 09★07★2013 |

36 ஆண்டுகள் பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவி
களுக்கு அறிவூட்டியதுடன் நல்லதோர் இல்லத்தரசியாய்
ஏழைகளுக்குத் தொண்டுகள் பல செய்து இறைவனடி சேர்ந்த
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

டச்சுவீதி, மீசாலை. (43670)(4.3.6) குடும்பத்தினர்.

## சமயசந்நிதிகளில்...

வண்ணை மாவடி ஞான வைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று ஞாயிறு ஆரம்பமாகித் தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து வைரவப் பெருமான் உள் வீதி, வெளிவீதியுலா வருதலும் இடம்பெறும்.

10ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறு நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு தீர்த் தோற் சமும் இடம் பெறவுள் ளன. 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும், மாலை திருவூஞ்சலும் நடைபெறுவதுடன் மறுநாள் ஞாயிறு சண்டேஸ்வரர் திருவிழாவுடன் அலங்கார உற்சவம் நிறைவுபெறும். (ஒ

♦ ♦ ♦

சாவகச்சேரி கல்வயல் ஐயனார் ஆலய பாலஸ்தாபனம் இன்று ஞாயிறு காலை 7.45 மணி தொடக்கம் இடம்பெறும். சிவஸ்ரீ தி.கிருஷ்ண மூர்த்திக் குருக்கள் தலைமையில் பாலஸ்தாபன கிரியைகள் இடம்பெறும். (ஒ-9)

♦ ♦ ♦

மல்லாகம் கோணப்புலம் ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் நடைபெற்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையவுள்ளது. (ஒ-86)

♦ ♦ ♦

சுன்னாகம் கிழக்கு மயிலணி கந்தசுவாமி ஆலயத்தின் புதிய சப்பர வெள்ளோட்ட விழா நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-86)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகலட்சுமி குமாரவேல்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலட்சுமி குமாரவேல் 26.06.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேல் அவர்களின் அன்பு மனைவியும், பராசக்தி (அமெரிக்கா), சிறிஸ்காந்தா (இலங்கை மின்சாரசபை, திருகோணமலை), ஆகியோரின் அன்புத் தாயாரும், ஈஸ்வரகுமார், பிறேமதா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், சிதம்பரப்பிள்ளை மற்றும் சுகிர்தலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல், வள்ளிநாயகி, பரிமளாதேவி,தில்லைநாயகி மற்றும் ஆறுமுகம், திலகவதி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதா, சுபேந்திரன், ஜெயந்திரன், விஜயலக்ஷ்மி, ஞானலக்ஷ்மி ஆகியோரின் பெரியதாயாரும், சிவகாமி, பாலசுப்பிரமணியம், தெய்வநாயகி, உமையாள், நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன்- ஆனந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், விசாகன், நதீசன், ஹரிஷ்யாம், ஜனகஜன், ஜெயகாந்தன், ஜெயபிரியா, ஜெயதீபா, ஜெயபிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2014) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை. 021 225 0426 (49422)(4.6.3) தகவல்: குடும்பத்தினர்.

### மயில்வாகனம் இராசரெத்தினம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், 42, பிரம்பங்குளம் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசரெத்தினம் நேற்று (28.06.2014) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகம்மாவின் பாசமிகு கணவரும், சசிகலாதேவி, யசோதாதேவி, சுவர்ணமாலா, சதானந்தன், சிவானந்தன், கணேசராசா, வாமதிதேவி, சிவறஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கவேல், கிரிதரன், இந்திக்கபாலினிதேவி, சுகந்தினி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், சுபிதரன், சிவதர்சினி, ரேகா லக்சிகா, மிதுசன், தர்சகன், சஞ்சயன், விதுனன், சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், வியாழனம்மா, யோகம்மா, மதியாபரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

42, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
077 138 8462, 077 666 9961,077 677 9383 (49120) (12.5.6) தகவல்: குடும்பத்தினர்.

### சரவணமுத்து கணபதிப்பிள்ளை (பற்பையா)



அராலியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கணபதிப்பிள்ளை (பற்பையா) 26.06.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான நாகராசா, இராசமணி,தங்கராசா மற்றும் திருநாவுக்கரசு, ஜெகநாதன் தங்கமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவபாக்கியம் (மாம்பழம்) ஆகியோரின் மைத்துனரும், சரோஜினி (லண்டன்), மனோகரன் (கனடா), பாஸ்கரன் (இத்தாலி), ரஞ்சினி (கனடா), சிறிதரன் (இத்தாலி), சிறிமலர், சிறிரஞ்சனா, சிறிகலா, யோகராணி, சிறிகரன் (இத்தாலி), சிறிகாந்தன் ஆகியோரின் சிறியதந்தையும், ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), யோதீஸ்வரன் (பிரான்ஸ்), விஜிதா, தேவநீதன் (லண்டன்), நிசானி (லண்டன்), சேந்தினி (லண்டன்) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

மாகியப்பிட்டிச் சந்தி,
மாகியப்பிட்டி. (49419) (45.3.6)

T.P. 021 321 1065
077 502 3405

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா ஏகாம்பரம்



(இளைப்பாறிய ஆசிரியை - யா/மயிலணி மகா வித்தியாலயம்- சுன்னாகம்)

யாழ். சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா ஏகாம்பரம் 26.06.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராசேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோணேஸ்வரன் (அப்பன்-ஜேர்மனி) கௌரீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கேதாரீஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற டிலேஸ்வரன் (ராஜன்) மற்றும் கபாலீஸ்வரன் (கண்ணன்-சுவீடன்) ஆகியோரின் பெரிய தாயும், ஜெகதீஸ்வரி (சுவீடன்), காலஞ்சென்ற பாமினி மற்றும் கௌசலாதேவி (ஜேர் மனி), தங்கேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், அர்ச்சனா, அனு சியா, சிந்துயா, சிவகாமி, நிதர்சன், சிந்துயன், துவிகா, டிலக்சன், ஜேனகன், சாருஜன், அலெக்ஸ், சகிரா, ஜெனுசன், ஜெனுசா, ஜெனிசா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அலெக்ஸ் மலப்பை,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (49428)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
**அருணாசலம் கோபாலரத்தினம்**

தோற்றம்
01.01.1933

மறைவு
21.06.2012

திதி: 29.06.2014

ஈராண்டுகள் ஓடிவிட்டன நீங்கள் எமைப்பிரிந்து
ஈடிணையற்ற உங்கள் அன்பை
எமக்கிங்கு தருபவர் யாருளர்?
ஈரவிழிகளுடன் இதயத்தில் உம் நினைவுகளை
சுமந்து நிற்கும்
குடும்பத்தினர்.

88, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(49423)(45.6.3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



யாழ் அச்சுவேலியை பிறப்பிடமாகவும், மட்டுவில் மற்றும் கொழும்பு கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**ஐயம்பிள்ளை தம்பிமுத்து**
(B.A University of London, S.L.A.S Class I)
(இளைப்பாறிய மேலதிக ஆணையாளர் கல்வி வெளியீட்டு திணைக்களம் )

அன்னை மடியில்
10.07.1934

ஆண்டவன் அடியில்
30.05.2014

பன்மொழிப் புலமையினால் பாடநூலில் உம்பெயர் பதித்து
கண்மணியாய் எமைக் காத்து, கற்பித்து கல்வி செய்து
உயர்வாக நீர் படித்து வந்தவழிப் பாதையெல்லாம் நல்
எண்ணமாய் எம்மனதில் இருத்தி வைத்து போற்றுகின்றோம்

நன்மை பல நீர் செய்து, பலர் வாழ உழைத்த நீங்கள்
கண்ணியமாய்ப் பணி செய்து கல்வியில் நீர் சிறப்புற்றீர்
நேர்மைநெறி நீர் நின்று நீதியாக பணி செய்து
வாய்மைநெறி தவறாத வள்ளலென்று பெயரெடுத்தீர்

எங்கள் அகல் விளக்கே, எங்கே நீர் சென்றீரோ
உங்கள் பார்வை பட துடிக்கின்றோம் எம்மவரே
எத்தனையோ தடைகள் தாண்டி, அங்கெல்லாம் படியேறி
நித்தமும் உம் வாழ்வை நினைக்கத்தான் முடிகிறது

முப்பத்தொரு நாளென்ன முழுவருசம் யுகமெல்லாம்
கழிந்திங்கு போனாலும் கனக்குது எம் இதயமப்பா
இப்புவியில் நாம் வாழ கற்பித்த உங்களது
ஆன்மா அது ஆறிடவே ஆண்டவனைத் தொழுகின்றோம்.

கூடி நீர் இக்குவலயத்தில் கொண்டிருந்த இல்லறத்தில்
நாடி உமை வந்து சேர்ந்த, நான் தனியாய் அழுகின்றேன்!- நான்
வாடிய பொழுதிலெல்லாம் ஆறுதல் அடைய வைத்தீர்
பாடுகின்றேன் ஆண்டவனை, நீர் சாந்தி அடைய வேண்டி.

கூடி நீவிர் பெற்றெடுத்த உம் மூன்று புதல்விகளும்
வாடியிங்கு நிற்கின்றோம் வந்தெம்மை காத்தருளும்
பாடி நாம் தொழுகின்றோம் பாசத்தில் அழுகின்றோம் நாம்
நாடிய ஆண்டவனில் நற்சாந்தி அடைந்திடுவீர்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிர்ந்து எமையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு 30.05.2014 வெள்ளிக்கிழமை இறைவனடியைச் சேர்ந்த எமது தெய்வம் அமரர் ஐயம்பிள்ளை தம்பிமுத்து அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு சகல விதத்திலும் உதவிய, ஆறுதல் தெரிவித்த மற்றும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் அப்பாவின் பிரிவுத் துயரோடு எங்களது உளமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று [29-06-2014] ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று அதனைத்தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் உங்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

30/2, டகஷினராம றோட்,
கல்கிசை.
+94 112739481

மனைவி- திருமதி சிவயோகம் தம்பிமுத்து
மற்றும் குடும்பத்தினர்

(C/14584)(5.6)

## அளவெட்டி ஆலயத்தில் திருட்டு

அளவெட்டி, ஜூன் 29

அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலுள்ள நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் கடந்த வியாழன் இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த விக்கிரகங்களை பெயர்த்துள்ளனர். பெறுமதிமிக்க இரு குத்துவிளக்குகள் உட்பட வேறு சில பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர். திருடிய விக்கிரகங்களில் இரண்டு விக்கிரகங்களை ஆலயத்துக்கு அருகே விட்டுச் சென்றுள்ளனர். அத்துடன் அருகிலுள்ள பிள்ளையார் ஆலயத்திலும் திருட முயன்ற போதும் முயற்சி கை கூடாத நிலையில் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

திருட்டுத் தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். ஆலயத்தின் அருகிலிருந்த 'சேர்ட்' ஒன்றை வைத்து மோப்ப நாயின் உதவியுடன் அளவெட்டி தெற்கிலுள்ள திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபரின் வீட்டை இனம் கண்டுள்ளனர். குறித்த நபருக்கு ஏற்கனவே பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு இருப்பதாகவும் அவர் தலைமறைவாகியுள்ளதால் அவரை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-36)

## போட்டி முடிவுகள்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையில் திருஞானசம்பந்தர் குரு பூசையை முன்னிட்டு ஞானசம்பந்தர் இல்ல அறக்கட்டளையும், சைவமகாசபையும் இணைந்து நடத்திய பண்ணிசைப் போட்டி கடந்த 21, 22 ஆம் திகதிகளில் வன்னி மற்றும் யாழ் .பிராந்தியங்களில் நடைபெற்றது.

போட்டி முடிவுகள்

**வன்னிப்பிராந்தியம் :** முதலாமிடம் - வ/கந்தபுரம் வாணி வித்தியாலயம், இரண்டாம் இடம்-கிளி/உருத்திரபுரம் ம.வி, மூன்றாம் இடம்-கிளி/முழங்காவில் ம.வி.

**யாழ் பிராந்தியம்:** முதலாமிடம்-யா/இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்-யா/இராமநாதன் கல்லூரி, மூன்றாம் இடம்-யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

**இறுதித் தெரிவில் பங்குபற்றிய பாடசாலைகள்**

வன்னிப் பிராந்தியம்

மன்/இலுப்பைக் கடவை அ.த.க.பாடாசலை, மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வ/ஐங்கரன் அறநெறிப்பாடசாலை, மு/தண்டுவான் அ.த.க. பாடசாலை, வ/மகாலட்சுமி அறநெறிப்பாடசாலை, மு/மல்லாவி மத்திய கல்லூரி, கிளி/முருகானந்த வித்தியாலயம்.

யாழ். பிராந்தியம்

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யா/பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை, யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யா/ புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம். (ஒ)

## காப்பெற் வீதிகள் நேற்றிரவு முதல் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் நகர அபிவிருத்திக்கான காப்பெற் வீதி வேலைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட மின்சார நிலைய வீதி, விக்ரோரியா வீதி, கந்தப்பசேகரம் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி, புங்கன்குளம் வீதி என்பன காப்பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன என்றும் ரூபா நூறு மில்லியன் செலவில் இவை காப்பெற் வீதிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

## இறுவட்டு வெளியீடு

கோண்டவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானபைரவர் ஆலயத்தின் ' ஐயன் வைரவன் தாண்டவம்' இறுவட்டு வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு. கிரிதரன் தலைமையில் வாகீஸ்வரி ஞானபைரவர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

# மரண அறிவித்தல்

## துரைரத்தினம் அப்புலிங்கம்

(இளைப்பாறிய பொறியியலாளர்)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் அப்புலிங்கம் 24.06.2014 செவ்வாய்க்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் (தலைமை ஆசிரியர்) செல்வரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சந்திரகலாவின் பாசமிகு கணவரும், ஆதிரையன், அபிராமி ஆகியோரின் தந்தையும், சிந்துவின் மாமனும், ஈசனின் அன்புப் பேரனும், கதிர்காமகார்த்திகேயன், சிவசக்திவேல், காலஞ்சென்ற பதஞ்சலி மற்றும் நாகராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (49426) (6.3)

அராலி மத்தி, அராலி.
தகவல்: நாகராஜேஸ்வரி சிவபாதம்

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் ஆசைப்பிள்ளை



பூநகரியைப் பிறப்பிடமாகவும் கண்ணாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம்ஆசைப்பிள்ளை நேற்று முன்தினம் (27.06.2014) வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், றசிகலா, பிறேமராசா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45, கண்ணாபுரம்,
நாவாந்துறை, யாழ்ப்பாணம். (49418) (45.6.3)

தகவல்: குடும்பத்தினர்
077 963 0618

# மரண அறிவித்தல்



## ராமசாமி முத்துலிங்கம்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல. 12, சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ராமசாமி முத்துலிங்கம் 27.06.2014 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமசாமி-அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நடராஜா-திலகவதி தம்பதியரின் மருமகனும், சற்குணகுமாரியின் அன்புக் கணவரும், கீர்த்திகா (Peoples' Bank Jaffna) சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதீபனின் (Central Bank) மாமனும், ஹேரதனின் பேரனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், சிவலிங்கம், யோகலிங்கம், அஞ்சலிங்கம் மற்றும் மகேஸ்வரி, ஞானலிங்கம், சோதியலிங்கம், நவரட்ணலிங்கம், நாகேஸ்வரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாலன், சாந்தகுமாரி, ஜெயகுமாரி, ஜெயபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இல. 12 சங்கிலியன் வீதி, நல்லூரில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை 30.06.2014 காலை 9.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077-7354084, 075-4421194

(C/14585)(10.6)

# 9 போட்டிகளில் சுவாரேஸ் விளையாடுவதற்குத் தடை

## ஹொண்டூரஸ் பயிற்சியாளர் விலகினார்



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஹொண்டூரஸ் அணி தனது 3 ஆட்டங்களிலும் தோற்றதையடுத்து அதன் பயிற்சியாளர் லூயிஸ் பெர்னாண்டோ சுரேஜ் தனது பதவியில் இருந்து விலகினார்.
இது தொடர்பாக அவர் கூறுகையில், ஹொண்டூரஸ் அணியை சாதிக்க வைக்க முடியாமல் போனதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இந்த உலகக் கிண்ணப் போட்டியில் மிகப் பெரிய கனவுகளை வைத்திருந்தேன். ஆனால் அது நடக்காமல் போனமை வருத்தமளிக்கிறது. கடைசி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தை விட எங்கள் அணியே நீண்ட நேரம் பந்தை கட்டுக்குள் வைத்திருந்த போதும், வெற்றி பெற முடியவில்லை. நல்ல மனச் சாட்சியுடன் பயிற்சியாளர் பணியில் இருந்து விடைபெறுகிறேன். இதை தோல்வியாக நான் நினைக்க வில்லை. சிறப்பாகச் செயலாற்றினேன் என்ற ஆத்ம திருப்தியுடன் விடைபெறுகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (த)

இத்தாலி வீரரைக் கடித்த விவகாரத்தில் சுவாரேஸ்'க்கு 9 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
9 போட்டிகளில் தடை விதிக்கப்பட்டுள்ளதால் எஞ்சி இருக்கும் உலகக் கிண்ண போட்டிகளில் அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
உதைபந்தாட்ட உலகில் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு தீவிர விசாரணை நடத்தியது. அவர் கடித்துக் குதறும் வீடியோக் காட்சிகளை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினர் பல்வேறு கோணங்களில் பார்த்து ஆராய்ந்தனர்.
சுவாரேஸ் மீதான குற்றச்சாட்டு ஆதாரங்களுடன் நிரூபணமானதால், அவருக்கு 9 சர்வதேசப் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்படுவதாகச் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுத் தலைவர் கிளாடியோ சல்செர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.



அவருக்கு ரூபா 67 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதுடன், அடுத்த 4 மாதங்களுக்கு உதைபந்தாட்டம் தொடர்பான எந்த நடவடிக்கைகளில் பங்கேற்கவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மேலும் அவருக்கு ரூபா 67 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதுடன், அடுத்த 4 மாதங்களுக்கு உதைபந்தாட்டம் தொடர்பான எந்த நடவடிக்கைகளில் பங்கேற்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
உலகக்கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் ஒழுங்கீனச் செயலுக்காக, அதிக ஆட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்ட சம்பவம் இதுதான்.
இதற்கு முன்பு 1994ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்பெய்ன் வீரர் லூயிஸ்என்ரிகியூவின் மூக்கை உடைத்ததற்காக இத்தாலியின் மவுரோ டாசோட்டிக்கு 8 ஆட்டத்தில் விளையாடத் தடை செய்யப்பட்டதே இந்த வகையில் அதிகபட்ச தண்டனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# ரொனால்டோவைப் பின் தொடரும் பிரேஸில் மொடல் அழகி அன்ட்ரெஸா

போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோவை அவரது முன்னாள் காதலி எனக் கூறப்படும் அன்ட்ரெஸா யுராச் பின்தொடர்ந்து வருகிறாராம்.
26 வயதான அன்ட்ரெஸா, பிரேஸிலில் பின்னழகு அழகுராணிப் போட்டியொன்றில் இரண்டாமிடம் பெற்றவர்.
தொலைக்காட்சிகளிலும் நடித்துள்ள இவர், கிறிஸ்டியானோ ரொனால்டோவின் முன்னாள் காதலி எனக் கூறப்படுகிறது. கடந்த வருடம் நடை பெற்ற சம்பியன்ஸ் லீக் போட்டியொன்றுக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் ரொனால்டோவும் தானும் பாலியல் உறவில் ஈடுபட்டதாகவும் கூறிப் பரபரப்பை ஏற்படுத்தியவர் அன்ட்ரெஸா.
அவ்வேளையில் ரொனால்டோ இந்தத்தகவலை ஆத்திரத்துடன் மறுத்திருந்தார். ஆனால், அன்ட்ரெஸா யுராச் இன்னமும் ரொனால்டோவைப் பின்தொடர்கிறார்.
தற்போது உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக ரொனால்டோ பிரேஸிலுக்குச் சென்றுள்ள நிலையில் அங்கு ரொனால்டோவை நெருங்குவதற்கு அன்ட்ரெஸா கடுமையாக முயற்சிக்கிறாராம்.
கடந்த வாரம் சாவோ போலோ நகரில் ரொனால்டோவும் போர்த்துக்கல் அணியின் ஏனைய வீரர்களும் பயிற்சியில் ஈடு படப்போவதாக அறிந்த அன்ட்ரெஸா மைதானத்துக்கு வெளியே காத்திருந்தார். ஆனால் போர்த்துக்கல் அணியினர் மைதானத்துக்கு வருவதற்கு முன்னர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களால் அன்ட்ரெஸா அங்கிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.
இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் 'நான் சி7 இற்கு (ரொனால்டோவுக்கு) நல்வாழ்த்துத் தெரிவிப்பதற்காக வந்தேன். ஆனால், மைதானத் திலி ருந்து நான் அகற்றப்பட்டேன். எனது ஊடக அட்டையையும் அவர் கள் பறித்துக்கொண்டார்கள். எங்கே கருத்துச் சுதந்திரம்?' என அன்ட்ரெஸா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். (த)





# கானா வீரர்கள் அதிரடி நீக்கம்

கானா அணியில் இருந்து இரு முக்கியமான வீரர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.
ஒழுக்க விதிமுறைகளை மீறியதன் அடிப்படையில் சலி முந்தாரி, கெவின் பிரின்ஸ் போட்டெங் ஆகியோர் கால வரையறையின்றி இடைநிறுத்தப்படுவதாக கானா உதைபந்தாட்டக் கழகம் அறிவித்துள்ளது.
இவர்களில் முந்தாரி நிறைவேற்றுக் குழு அதிகாரியைத் தாக்கியதாகவும், போட்டெங் பயிற்றுவிப்பாளரை திட்டியதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. (த)

# ஆவலாக காத்திருந்த காதலியை தவிக்கவிட்ட பலோடெல்லி



இத்தாலி அணி தொடரில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் பலோடெல்லி மீது அவரது காதலி பேனி கோபத்தில் உள்ளார்.

இத்தாலி அணி தொடரில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் பலோடெல்லி மீது அவரது காதலி பேனி கோபத்தில் உள்ளார்.
இத்தாலி, உருகுவே ஆட்டத்தின்போது பலோடெல் லியின் ஆட்டத்தைக் காண ஆவலுடன் காத்திருந்தார் பேனி. ஆனால் இத்தாலி அணியின் ஆட்டம் சிறப்பாக அமையவில்லை.
பரபரப்பாகச் சென்ற ஆட்டத்தில் முதல் பாதி வரை இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. பின்னர் இரண்டாவது பாதியில் 81ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் கோடின் அற்புதமான கோல் ஒன்றை அடித்து அந்த அணியை 1- 0 என்ற கணக்கில் வெற்றி பெறச் செய்தார்.
இந்த தோல்வியை தொடர்ந்து இத்தாலி அணி உலகக்கிண்ணப் போட்டியில் இருந்து வெளியேறியது.
இந்நிலையில் 5 நட்சத்திர ஹோட்டலில் தங்கி இருந்ததால் உருகுவே வெற்றி பெற்றதாகவும், அதே சமயம் அதற்கு எதிரே உள்ள 3 நட்சத்திர ஹோட்டலில் இத்தாலி அணி தங்கி இருந்ததால் தோல்வி பெற்றதாகவும் கிண்டல் பேச்சுக்கள் கிளம்பின. (த)

# ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெற்றுவருகின்றன.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதற் பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பானதாக இருந்தது. முதற் பாதி ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வீரன் பிறினோராஜ் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார்.
தொடர்ந்து 8ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த கோல் அடிக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் தீபன் தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. தொடர்ந்து 18 ஆவது நிமிடத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வீரன் திலீபனும், 20 ஆவது நிமிடத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் தனுவும் தமது அணிக்கான கோல்களைப் அடிக்க முதற் பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும்தத்தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடினர். இதன் போது ஆனைக்கோட்டையூனியன் விளையாட்டுக்கழக வீரர்களான செல்வக்குமார் 38 நிமிடத்திலும், மதிராஜ் 40ஆவது, 44 ஆவது நிமிடத்திலும் தமது அணிக்கான கோல்களை அடித்தனர்.



உரும்பிராய் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர்கள் தமது அணிக்கான கோலை அடிக்கவேண்டும் என்ற உத்வேகத்துடன் எதிர் அணியின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். அவர்களால் கோல்களைப் பெற முடியவில்லை.
செல்வக்குமார் மீண்டும் 52ஆவது நிமிடத்தில் கோலை அடிக்க ஆட்ட நேர முடிவில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ், ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதற் பாதி ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் விஸ்னு தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 23ஆவது நிமிடத்தில் நிசால்ட் தனது அணிக்கான 2ஆவது கோலை அடிக்க முதற் பாதி ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணியினர் கோல்போடக் கடும் முயற்சி செய்தனர்.
கொலின்ஸ் விளையாட்டுக் கழகப் பின் கள வீரர்களின் தடுப்பட்டம் காரணமாக யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணியினரால் கோலைப் பெற முடியவில்லை.
46ஆவதுநிமிடத்தில்கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் தனது அணிக்கான கோலை அடிக்க ஆட்ட நேர முடிவில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதற் பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும்தத்தமது அணிக்கான கோலைப் பெற வேண்டிக் கடுமையாக மோதிக்கொண்டனர். இதன் போது 18ஆவது நிமிடத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெகதீஸ் தனது அணிக்கான கோலை அடித்தார். பதிலுக்கு புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணி முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவர்களால் கோல் பெறமுடியவில்லை. இதனால் முதற் பாதி ஆட்ட முடிவில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது ஆட்டத்தில் சில மாற்றங்களைக் மேற்கொண்டு தமது அணிக்காகக் கோல்களைப் பெற வேண்டி எதிர் அணியின் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.
இதன்போது ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி வீரன் கனிஸ்ரன் தனது அணிக்காக மேலும் ஒரு கோலை அடிக்க ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.
இதன்பின்னர் சுதாகரித்துக் கொண்ட புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணியின் மதுசன் 41ஆவது நிமிடத்தில் கோலைப் போட்டார். ஆனால் 46ஆவது, 47ஆவது நிமிடங்களில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி வீரன் சயந்தன் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடிக்க தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகஅணி ஆட்ட நேர முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (த-23)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கு ஒரு தொகுதி துடுப்பாட்ட உபகாரணங்களை அணித்தலைவர் செல்ரனிடம் கையளித்தார். (த-23)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி கடந்த ஐந்து தினங்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் 100 மீற்றர் ஓட்டத்தில் திறமையை வெளிப்படுத்தும் வீரர்கள். (த-20)


## காணி விற்பனைக்கு

புதிய செம்மணி வீதி கல்வியங்காடு யாழ்ப்பாணத்தில் 2 பரப்பும் 06 குளியும் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: - 077 9251054

## காணி விற்பனைக்கு

A-9 வீதியில் 1 ½ பரப்பு காணி நல்ல சூழலில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 076 7112102


## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கந்தையா பாலசிங்கம்



திசம்ளை சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவரும் ஆகிய இராமலிங்கம் கந்தையா பாலசிங்கம் கடந்த (24.06.2014) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தையா- தங்கம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சிவபாதம்-செல்லம்மாவின் மூத்த மருமகனும் மற்றும் வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், நிமல்ராஜன் (கனடா), மோகனராஜன் (லண்டன்), பால்ராஜ் (லண்டன்), ஸ்ரீதேவி (இந்தியா), நர்சன் (இந்தியா)ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோபனா (கனடா), ஜெனாரஞ்சனி (லண்டன்),ஸ்ரீமாதுரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவின், விதுன், தருண்,பிரனீத், அன்விக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இ.க. சுப்பிரமணியம், இ.க. இரத்தினம் மற்றும் திருமதி பா. புவனேஸ்வரி, திருமதி கோ. மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2014) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
செல்லையா கோபாலகிருஷ்ணன் அவர்களின் மாலிகாவத்தை சங்கானை இல்லத்தில் ஆத்ம சாந்தி பிரார்த்தனை (30.06.2014) திங்கட்கிழமை நடைபெறும்.

மாலிகாவத்தை, சங்கானை
T.P.இந்தியா-00918939624348
சங்கானை - 021 2250261
021 3007213

**தகவல்**: திரு செ. கோபாலகிருஷ்ணன் (மைத்துனர்) சங்கானை
திரு. பா. மதியழகன் யாழ்ப்பாணம் (மருமகன்)

## மரண அறிவித்தல்

### குணசிங்கம் குணரூபன்



மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணசிங்கம் குணரூபன் நேற்று (28.06.2014) சனிக்கிழமை அகாலமரணமானார்.
அன்னார் குணசிங்கம் காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட மகனும், நவரத்தினராசா - கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும் சீதாயினியின் (ஆசிரியை- மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்) அன்புக் கணவரும் சிவானுஷன், அபினன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும் குணராஜா,குணமதி (ஆசிரியை - கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை) குணசேகர், குணரதி, குணேந்திரா, குணகீதா (பூாண்டியன்குளம் பிரதேச செயலகம்),குணந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மீசாலை வடக்கு வேம்பிராய் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**மீசாலை**

**தகவல்:**
குடும்பத்தினர்.
குணசிங்கம் - தந்தை (அப்புலிங்கம்)

## மரண அறிவித்தல்


### கிருஷ்ணர் மகாலிங்கம்



போயிட்டியைப் பிறப்பிடமாகவும்,கீரிமலையை வதிவிடமாகவும் முகாந்தர வீதி (காங்கேயன் வெதுப்பகம் அருகில்) மல்லாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் மகாலிங்கம் நேற்று (28.06.2014) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும்,காலஞ்சென்றவர்களான மாதர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்லம்மா, இராசம்மா, மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார், சிவகுமார் (கணக்காளர்- வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், மருதங்கேணி), ஜெயக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில்), சசிகுமார் (பிரான்ஸ்), இந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சுபைதா, பிரதீபா (விரிவுரையாளர் - விலங்கியல்துறை,யாழ். பல்கலைக்கழகம்), கிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பரனிகா, துளசிகன்,தரணிகன், திருவருண் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காங்கேயன் பேக்கரி அருகில்,**
**முகாந்திரம் வீதி,**
**மல்லாகம்.**

**தகவல்**: குடும்பத்தினர்.
077 2389625, 077 9459307
021 2242192



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி கடந்த ஐந்து தினங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் அஞ்சல் ஓட்டத்தில் திறமையை வெளிப்படுத்தும் வீராங்கனைகள். (த-20)

# கலைமகள், இளவாலை மத்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜுன் 29

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படும் மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் அச்சு வேலி கலைமகள் விளையாட் டுக் கழகம், இளவாலை மத் திய விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த வாரம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

**5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.**

5 செற்களைக் கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில் அமராவதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (த-23)

# இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஜுன் 29

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிறைட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜுன் 29

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜுன் 29

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# தாச்சிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜுன் 29

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அறிவொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 6.40 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வெஸ்றோம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.20 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# மணற்காடு அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜுன் 29

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின்ஆட்டங்கள்றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்றது. (த-23)

# யங்கம்பன்ஸ், டயமன்ஸ் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜுன் 29

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் ககழக அணிக்கும் நெடியகாடு விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# பாடும்மீன், றோயல் ஆட்டங்களில் அசத்தின

யாழ்ப்பாணம், ஜுன் 29

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)




# கரப்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுன் 29

தொண்டமானாறு வாழ் மக்களினால் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த முருகுப்பிள்ளை நவரெட்ணசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியான 'ஏ' தர அணிகள் பங்குபற்றும் மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொண்டமானறு விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

மேற்படி போட்டியில் 6 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றுகின்றன. (த-23)




## மெஸ்ஸியை பின்தள்ளிய றொனால்டோ

உலகக்கிண்ண விளம்பர ஒப்பந்தத்தில் அதிக வருமானம் பெறுவதில் போர்த்துக்கல் அணியின் றொனால்டோ ஆர்ஜென்ரீனா அணியின் மெஸ்ஸியை ஓரங்கட்டினார்.

நைக் நிறுவனத்துடன் ஒப்பந்தமாகியுள்ள றொனால்டோ ஆண்டுக்கு 14.1 மில்லியன் பவுண்ட்ஸ் ஊதியமாகப் பெறுகிறார். ஆனால் அதே நேரம் அடிடாஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தமாகியுள்ள மெஸ்ஸி ஆண்டுக்கு13.6 மில்லியன் பவுண்ட்ஸ் ஊதியமாகப் பெறுகிறார்

இதன் மூலம் உலகக் கிண்ண விளம்பர ஒப்பந்த வருமானத்தில் றொனால்டோ முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் மெஸ்ஸியும், மூன்றாவது இடத்தில் நெய்மரும் (9.5 மில்லியன் பவுண்ட்ஸ்) இடம் பெற்றுள்ளனர்.

தோமஸ் முல்லர்( 3 மில்லியன் பவுண்ட்ஸ்). ஓசில்(3 மில்லியன் பவுண்ட்ஸ்). ரூனி(3 மில்லியன் பவுண்ட்ஸ்) அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர். (த)

## லயனல் மெஸ்ஸி வேற்றுக் கிரகவாசி

உலகக்கிண்ணத்தில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் மெஸ்ஸி வேற்று கிரகவாசியாக இருக்கிறார் என்று நைஜீரியப் பயிற்சியாளர் புகாழாரம் சூட்டியுள்ளார்.

ஆர்ஜென்ரீனா- நைஜீரியா அணிகள் மோதிய ஆட்டத்தில் போட்டி தொடங்கிய மூன்றாவது நிமிடத்திலேயே ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர ஆட்டக்காரர் லயனல் மெஸ்ஸி கோல் போட்டு அசத்தினார்.

பின்னர் ஆட்டம் சமபலமாக இருந்தபோது மெஸ்ஸி மீண்டும் 45ஆவது நிமிடத்தில் தனது அணிக்காகக் கோலைப் பதிவு செய்தார். ஆட்ட நேர முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 3- 2 என்ற கோல் கணக்கில் நைஜீரியாவை வீழ்த்தியது.

மெஸ்ஸியின் மிரட்டல் ஆட்டம் பற்றி நைஜீரியப் பயிற்சியாளர் ஸ்டீபன் கேசி கூறுகையில், லயனல் மெஸ்ஸி ஆர்ஜென்ரீனா அணியின் அச்சாணி போன்றவர். அவர் கடவுளின் ஆசி பெற்றவராகத் தெரிகிறார்.

அவரைத் தவிர்த்து ஆர்ஜென்ரீனா அணியை நினைத்துப் பார்க்க முடியாது. ஆர்ஜென்ரீனா அணியில் திறமையான பல வீரர்கள் இருக்கலாம். ஆனால் மெஸ்ஸி புதனில் இருந்து குதித்தவர் என்று கூறியுள்ளார். (த)



## ஓட்டப் போட்டியில் சாதனை படைத்த எட்டு மாதக் கர்ப்பிணி



சாதனைக்கு வயது மட்டுமல்ல.. கர்ப்பம் கூட ஒரு தடையே அல்ல என்று 8 மாதக் கர்ப்பிணியாக இருக்கும் அலிசியா மோண்ட்டானோ நிரூபித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த இவர், தேசிய அளவில் மத்திய தூர ஓட்டப் போட்டிகளில் பங்கேற்று 5 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார். மேலும் பல்வேறு சர்வதேச ஓட்டப் போட்டிகளிலும் 2012 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலும் அமெரிக்காவின் சார்பில் இவர் பங்கேற்றுள்ளார்.

2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்க திட்டமிட்டுள்ள இவர், அதற்குள் குழந்தை பெற்றுக் கொள்ள முடிவெடுத்துக் கருவுற்றார். இந்நிலையில், கடந்த 26 ஆம் திகதி கலிபோர்னியா நகரில் நடைபெற்ற 800 மீற்றர் ஓட்டப்போட்டில் 8 மாதக் கர்ப்பிணியாகப் பங்கேற்று ஓடிய இவர் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு இதே தூரத்தை 1:57.34 கடந்தது இவரது அதிவேக சாதனையாகக் கருதப்படுகிறது. இந்தப் போட்டியில் 35 வினாடிகள் தாமதமாக 2:32.13 நேரத்தில் அலிசியா மோண்ட்டானோ குறித்த தூரத்தைக் கடந்துள்ளார். 28 வயதாகும் இவர் வெற்றிக் கோட்டை கடந்ததும் கூடியிருந்த பார்வையாளர்கள் கைதட்டி, கூச்சலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். (த)

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

AAT Classes@ Spectra Skills
aat SRI LANKA
புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்
Foundation, Intermediate, Final
A/L வர்த்தகப்பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு Foundation level விலக்களிப்பு.
Spectra Skills இல் AAT கற்கைநெறியை கற்பவர்களுக்கு வேலை வாய்ப்புகளும் காத்திருக்கிறது.
6th July 2014 முன்னர் பதிவு செய்பவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணங்களும் உண்டு.
தொடர்புகளுக்கு:- spectra skills
No.19,Stanley Road (Peoples bank 2nd floor), Jaffna.
Tel:-0212221422 / 0212221423

வீடு வாடகைக்கு
சாவகச்சேரி நகரில் A 9 கண்டி வீதியில் பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கும் உகந்தது.
தொடர்பு: 077 9172696

காணி விற்பனைக்கு
கொடிகாமத்தில் மடத்தடி வீதியில் உள்ள 14 பரப்பு, மற்றும் 4 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு- 077 2359772

## பிற்போடப்பட்டுள்ளது

நாளை 30.06.2014 திங்கட் கிழமை திருநெல்வேலி பழங் கிணற்றடி வீரகத்தி விநாயகர் திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற இருந்த

**தனேஸ்குமார் - யசிந்தா**

ஆகியோரின் திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 09.07.2014 (ஆனி 25) புதன்கிழமை காலை 8.45 - 10.21 க்கு மேற்படி மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தரு கின்றோம்.

திரு. திருமதி சச்சிதானந்தம் குடும்பத்தினர்.
பலாலி வீதி, திருநெல்வேலி

திரு. திருமதி. குமாரசாமி குடும்பத்தினர்
பழங்கிணற்றடி பிள்ளையார் கோவில் வீதி, திருநெல்வேலி

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல் தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், STANDARD PRONUNCIATION, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்.
பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி ➡ ஆலயம் ➡ AF அல்லது ஆரியகுளம் ➡ றக்கா றோட் ➡ AF

முதலீடு ஒருமுறை மட்டுமே !!
நம்பிக்கையான முதலீட்டில் அதிக இலாபம் பெற...
ஜீஸ் பக்கெட் மெசின்
பெறுமதியான பரிசுகளுடன்
1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்
• 1 வருட உத்தரவாதம்
• இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
• விற்பனைக்கு பின் சேவை
• இலவச விநியோகம்
ரூ.2 /=
ரூ.5 /=
ரூ.10 /=
பக்கட்டுகளை தயாரிக்கலாம்




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03
max adz

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.